
# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION



ஆகஸ்ட் — 1963



மறைந்த

திரு. T. S. நடராசப் பிள்ளை

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

# தஞ்சாவூர் எய்டட் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்



தலைவர்

**திரு. கே. ரெங்கசாமி ஐயங்கார்**

(செம்போடை)



காரியதரிசி

**திரு. இராஜகோபாலய்யர்**

(குடந்தை)




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 25 } ஆகஸ்ட் 1963 { இதழ் 8

# சிறந்த நோக்கம்— சீரற்ற நடைமுறை

மனித வாழ்க்கையை எண்ணற்ற தேவைகளின் தொகுப்பு என்று கூறினால் அது மிகையாகாது. ஒரு தேவை நிறைவேறினால் மற்றொன்று—அதுவும் நிறைவேறினால் வேறொன்று என்கிற வகையில் தேவைகள் பெருகிக்கொண்டே இருப்பதை நாம் காண்கிறோம். தேவைகள் எண்ணற்றவையாகவும் முடிவற்றவையாகவும் இருந்தபோதிலும் தேவைகளில் எல்லாம் தலைசிறந்த தேவையாக—அடிப்படைத் தேவையாக இருப்பது உணவுத் தேவையே என்பதை யாரும் மறுக்க முடியாது. உணவு இல்லையேல் உயிர் இல்லை. உணவு இல்லையேல் உடல் இல்லை. உணவு இல்லையேல் வாழ்க்கை இல்லை. உணவு இல்லையேல் எதுவுமே இல்லை. ஆண்டவனே அன்ன வடிவத்தில்தான் இருக்கிறார் என்று நம் ஆன்றோர்களில் சிலர் தெரிவித்துள்ள அறிவுரை, இந்தக் கருத்தின் அடிப்படை

யில் தோன்றியதுதான். "மண்திணி ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று மணிமேகலை என்னும் எழில் மிகு நூல் எடுத்து இயம்பியிருப்பதும் இந்தக் கருத்தை முன்வைத்துத்தான். "உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை, எல்லாம் கண்ணன்" என்று நம்மாழ்வார் நயம்பட உரைத்திருப்பதும், இந்தக் கருத்தின் வளர்ச்சியே ஆகும்.

உடலை வளர்க்க உணவு இன்றியமையாதது என்றால் உள்ளத்தை வளர்க்கக் கல்வி இன்றியமையாதது. போதுமான உணவு கிடைக்காவிட்டால் உடல் திண்மையாக அமைய முடியாது. சிறப்பான கல்வி கிடைக்காவிட்டால் உள்ளம் உயர்வு மிகுந்ததாக இருக்க முடியாது. சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறவேண்டுமானால் ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டின் கல்வியின் முன்னேற்றத்தையே பொறுத்திருக்கிறது என்று கூறிவிடலாம். இந்த மிக விழுமிய கருத்தைத்தான், உலகப் பெரும் புலவராகிய திருவள்ளுவனார், "எண்என்ப, ஏனை எழுத்து என்ப, இவ் இரண்டும், கண் என்ப வாழும் உயிர்க்கு" என்னும் மொழிகளால் இயம்பியிருக்கிறார். கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் என்று நம் சான்றோர்கள் அளித்துள்ள பொன்மொழியும் இந்தக் கருத்தின் அடிப்படையில் பிறந்த நன்மொழியே ஆகும்.

உடலை வளர்க்கும் ஆற்றல் மிக்க உணவை மக்களுக்கெல்லாம் அள்ளி வழங்குவது தலைசிறந்த அறமாகும் அதுபோலவே, உள்ளத்தைப் பண்படுத்தும் கல்விப் பொருளை அனைவருக்கும் வழங்குவது இணையற்ற நற்செயலாகும். இந்த இரண்டு செயல்களையும் ஒன்றாக இணைத்தாலோ, அந்த இணைப்பு, ஈடு இணையற்ற மாபெருஞ் செயலாக, ஒப்பு உயர்வற்ற தனிப்பெரும் அறமாக ஓங்கி உயர்ந்து ஒளி வீசித் திகழும் என்பதில் துளியும் ஐயம் இல்லை. அத்தகைய ஒரு தன்னிகரற்ற இணைப்புதான் மதிய உணவுத் திட்டமாகும்.

சென்ற சில ஆண்டுகளாகத் தமிழகத்தில் நடைமுறையில் இருந்துவரும் இந்தத் திட்டத்தின் நோக்கம், சிறப்பு மிகுந்தது—சீர்மை வாய்ந்தது—எழில் நிறைந்தது—ஏற்றம் மிகுந்தது என்பதை யாரும் மறக்கமுடியாது. மக்களுக்கு உணவை அளிப்பது சிறந்த அறம்; அந்த உணவைப் பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளுக்கு அளிப்பது மிகச் சிறந்த அறம் என்பதை, யார்தானாகட்டும், எப்படி மறந்துவிடமுடியும்?

கிராமப் பகுதிகளில் பல இடங்களில், பள்ளிக்கூடம் இருக்கும் இடத்திற்கும், பிள்ளைகளின் பெற்றோர்கள் வாழும் இடங்களுக்கும் இடையே பெருந்தொலைவு இருக்கிறது. இத்தகைய நிலையில் நண்

பகல் நேரத்தில் பிள்ளைகள் தங்களுடைய இல்லங்களுக்குச் சென்று உணவு அருந்திவிட்டு வருவது இயலாத செயல். அதுமட்டுமல்ல. எத்தனையோ ஏழை பெற்றோர்களால் தங்களுடைய பிள்ளைகளுக்குப் போதுமான உணவை அளிப்பதற்கு ஏற்ற பொருளாதார ஆற்றல் இல்லை. இந்தக் காரணங்களால் பிள்ளைகள் பசித்த வயிற்றோடு வகுப்பில் அமர்ந்திருந்தால் அவர்கள் செவிகளில் பாடம் ஏறுமா? எனவேதான் நண்பகல் உணவு இயக்கம் தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த இயக்கத்தின் நோக்கம், மிகச் சிறந்தது, மிக உயர்ந்தது என்பதிலே யாருக்கும் எத்தகைய கருத்து வேற்றுமையும் இருக்க முடியாது.

ஆனால் அதற்காக இந்த இயக்கம் நடத்தப்பட்டுவருகிற நடைமுறையில் காணப்படுகிற பல்வேறு சிக்கல்களையும் சீர்கேடுகளையும் எடுத்துக்கூறாமல் இருப்பது முறையாகாது.

இந்த இயக்கத்தின் நடைமுறையில் காணப்படுகிற முதற் பெருங்குறை, ஒவ்வொரு பிள்ளைக்கும் தரப்படுகிற உணவு,போதிய அளவுடையதாகவும் இல்லை, தேவையான சத்து உடையதாகவும் இல்லை என்பதே

நண்பகல் உணவு அளிப்பதற்காக. ஒவ்வொரு பிள்ளைக்காகவும் தமிழ் நாட்டு அரசாங்கத்தார் தருகிற தொகை ஆறே ஆறு காசுகள் ஆகும். பள்ளிக்கூடநிர்வாகிகள் அந்தந்த வட்டாரத்துப் பொது மக்களிடமிருந்து ஒவ்வொரு பிள்ளைக்காகவும் நான்கு காசு நன்கொடை திரட்டவேண்டு மென்றும், அரசாங்கத்தார் தருகிற ஆறுகாசுகள்—நன்கொடையாகத் திரட்டப்பட்ட நான்கு காசுகள் ஆகிய இரண்டையும் சேர்த்து, ஒவ் வொரு பிள்ளைக்கும் பத்துக் காசுகள் மதிப்புள்ள உணவு தரப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்தார் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால் பல இடங்களில் அரசாங்கத்தார் தருகிற ஆறு காசுகளை மட்டுமே வைத்துக் கொண்டு உணவு தயாரிக்கப்பட்டு அளிக்கப் பட்டுவருகிறது. மேற்கொண்டு நான்கு காசுகளை நன்கொடையாகத் திரட்ட முடிவதில்லை. பெரும்பாலான பெற்றோர்கள் ஏழைப் பெற்றோர்கள். அத்தகையவர்களிடமிருந்து நன்கொடையை எதிர்பார்க்கவே முடியாது. வசதியுள்ள பெற்றோர்கள் மிகச் சிலரே. அவர்களிடமிருந்து நன்கொடையைப் பெறமுடியும் என்றாலும், ஒரு முறை அல்லது இருமுறைதான் பெறமுடியும். மாதந்தோறும் அல்லது ஆண்டு தோறும் அவர்களிடமிருந்து நன்கொடையைத் திரட்டு

வது மிகக் கடினமான செயலாகவே இருக்கிறது. எனவேதான், பல இடங்களில், அரசாங்கத்தார் தருகிற ஆறுகாசுகளை மட்டுமே வைத்துக்கொண்டு உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

அரிசி, பருப்பு, எண்ணெய், கடுகு, மிளகு முதலிய உணவுப் பொருள்களின் விலைகள் யாவும் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் ஏறி அமர்ந்து கொண்டு, மேலும்மேலும் உயர்ந்து கொண்டே யிருக்கிற இந்தக் காலத்தில், ஆறே ஆறு காசுகளை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு பிள்ளைக்கு உணவு தயாரித்தால், அந்த உணவின் தரமும் சரி, அளவும் சரி, மிக மிகக் குறைவாகத்தானே இருக்கமுடியும்? ஊட்டச் சத்து இல்லாத உணவை மிகக் குறைந்த அளவில் தருவதால், பிள்ளைகளின் பசியும் தீராது; அவர்களுடைய உடலும் தக்க முறையில் வளராது என்பதை யாராவது மறுக்கமுடியுமா? குறைந்தது பன்னிரண்டு காசுகளாவது இல்லாமல் இந்தக் காலத்தில் ஒரு பிள்ளைக்கு எத்தகைய உணவைத் தயாரிக்க முடியும்? அன்பு கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும் ஆட்சியாளர்கள்.

சில இடங்களில், நான்கு காசு நன்கொடை திரட்டப்பட்டு, பத்துக் காசு அளவுக்கு ஒவ்வொரு பிள்ளைக்கும் உணவு அளிக்கப் பட்டதாகக் கணக்குப் புத்தகங்களில் குறிப்புகள் பதிந்திருக்கும். ஆனால் நடைமுறையில் தரப்படுவது, ஆறு காசு மதிப்புள்ள உணவே என்று பலர் தெரிவித்துள்ளார்கள். அரசாங்கத்தைத் திருப்திப்படுத்துவதற்காக இத்தகைய கணக்குகள் தயாரிக்கப் படுகின்றனவே தவிர உண்மையில் நான்கு காசுகள் வசூலிக்கப்படு வதேயில்லை என்றும் சொல்லப்படுகிறது.

உண்மையாகவே நன்கொடை வசூலிக்கப்படுகிற இடங்களில் அந்த வசூல் காரணமாகக் கல்வியின் தரம் பெரிதும் பாதிக்கப்படு கிறது. நன்கொடையை வசூலிப்பதற்காக ஆசிரியர்கள் அடிக்கடி பெற்றோர்களின் இல்லங்களை முற்றுகையிடவேண்டியிருக்கிறது. ஒரு முறைக்குப் பலமுறை சென்றால்தான் ஓரளவாவது நன் கொடையைத் திரட்ட முடியும். நன்கொடையைத் தர இசைபவர்கள் மிகச் சிலரே. அந்தச் சிலரும் இசைந்த உடனேயா தந்து விடு கிறார்கள்? பலமுறை சென்றால்தானே சிறிதளவு தொகையாவது திரள்கிறது? நன்கொடைகளைத் தரக்கூடிய பெற்றோர்களைக் கண் டறிவதிலேயும், அவர்களுடைய இல்லங்களுக்கு மீண்டும் மீண்டும் செல்வதிலேயும், பலமுறை அலைந்து திரிந்தும் போதுமான நன் கொடையைத் திரட்ட முடியவில்லையே என்று கைகளைப் பிசைந்து கொள்வதிலேயுமே ஆசிரியர்களின் நேரமும் நினைப்பும் அறிவும் ஆற் றலும் செலவிடப்பட்டால், அவர்களால் அளிக்கப்படுகிற கல்வி

எப்படி முழுமை படைத்ததாக இருக்கமுடியும்! இவ்வாறாக ஆசிரியர்களின் கவனம் கல்வியைத் தவிர்த்த மற்றொரு துறைக்குத் திருப்பிவிடப்பட்டால் – அந்தத் துறை எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும் – அதனால் கல்வியின் தரம் குறையத்தானே செய்யும்?

சில பல பள்ளிக்கூடங்களில் உணவைச் சமைத்துப் பரிமாறுவதற்குத் தனியாக ஆட்களை நியமிக்க முடியாத காரணத்தால், அந்தப் பணி ஆசிரியைகளாகப் பணியாற்றுவோர்மீது சுமத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இது உண்மையானால் இதைவிட வருந்தத்தக்க நிலைமை வேறு இருக்கமுடியாது. ஆசிரியர்கள் நன்கொடை திரட்டுவோராகவும், ஆசிரியைகள் சமையல் புரிவோராகவும் மாறிவிட்டால் கல்வியைப் புகட்டுவது யார்?

ஆசிரியர்கள், ஆசிரியைகள் ஆகியோரின் நேரமும் நினைப்பும் மட்டுமல்ல, டிபுடி இன்ஸ்பெக்டர்கள் முதலிய கல்வித்துறை அதிகாரிகளின் நேரமும் நினைப்புங்கூட, அவர்களுடைய இயல்பான பணியிலிருந்து மதிய உணவுத் துறைக்குத் திருப்பிவிடப்படுகின்றன என்று கேள்விப்படுகிறோம். மதிய உணவுத் திட்டத்தைப் பல்வேறு பள்ளிக்கூடங்கள் தக்க முறையில் நிறைவேற்றுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதிலேயும், அத் திட்டம் பற்றிய கணக்குகள் ஒழுங்காக வைக்கப்பட்டுள்ளனவா என்பதைத் தணிக்கை செய்வதிலேயும், அதன் நடைமுறையில் காணப்படுகிற ஊழல்கள் – சீர்கேடுகள் முதலியவற்றைக் கண்டறிவதிலேயும் டிபுடி இன்ஸ்பெக்டர்களின் நேரம் முழுவதும் செலவாகிவிடுவதால், பல்வேறு பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் எவ்வாறு இருக்கிறது என்பதை அறிவதில் அவர்கள் முழுக் கவனம் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

இந்தச் சீர்கேடுகள் யாவும் களையப்படவேண்டுமானால், மதிய உணவுத் திட்டத்திற்கும் கல்வித் துறைக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்ற நிலை உருவாக்கப்படவேண்டும். நகரப் பகுதிகளில் மதிய உணவுத் திட்டம் பற்றிய முழுப் பொறுப்பும் நகராட்சி மன்றங்களுக்குக் காப்பட்டு விடவேண்டும். அதுபோலவே கிராமப் பகுதிகளில், இந்தப் பணியை, ரெவின்யூ இலாகாவுக்கு அளித்துவிடவேண்டும் பஞ்சாயத்து யூனியன்களின் துணையோடு ரெவின்யூ இலாகா இந்தப் பணியை மேற்கொள்ளலாம். ஆசிரியர்கள், பள்ளிக்கூட நிர்வாகிகள், கல்வி இலாகா அதிகாரிகள் ஆகியோருக்கும் மதிய உணவுத்திட்டத்திற்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது என்பது, திட்டவட்டமாகவும் தெள்ளத் தெளிவாகவும் அறிவிக்கப்படவேண்டும். இப்படியெல்லாம் செய்தால்தான், மதிய உணவுத்

திட்டத்தின் நடைமுறை காரணமாக, ஆரம்பக் கல்வித் துறையில் ஏற்பட்டுவரும் சீரழிவைத் தடுத்து நிறுத்தமுடியும்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் பன்னிரண்டு காசு பெறுமானமுள்ள உணவை அளிக்க ஏற்பாடு செய்து, அந்தத் தொகை முழுவதையும் அரசாங்கமே தரவேண்டும். மதிய உணவுக்காக நன்கொடை திரட்டுவது என்ற ஏற்பாட்டை நிறுத்திவிடவேண்டும். தேவையானல், அரசாங்கத்தார், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக என்றே ஒரு சிறிய வரியை விதிக்கலாம். இத்தகைய உயர்ந்த நோக்கத்திற்கான வரி என்பது தெளிவாக அறிவிக்கப்பட்டுவிட்டால், அத்தகைய வரியை யாரும் எதிர்க்கமாட்டார்கள். இப்படிச் செய்துவிட்டால், இந்தத் திட்டத்தின் நடைமுறையில் காணப்படுகிற பல்வேறு ஊழல்களும் சீர்கேடுகளும் அகன்றுவிடும்.

நாம் தெரிவித்துள்ள இந்த ஏற்பாடுகளையெல்லாம் தமிழக ஆட்சியாளர்கள் அன்புகூர்ந்து மேற்கொள்ளவேண்டும். மேற்கொண்டால்தான், ஆரம்பக் கல்வியின் தரமும் உயரும்; மதிய உணவுத் திட்டத்தின் நோக்கமும் நிறைவேறும்.

---

(6—ம்பக்கத் தொடர்ச்சி)

நேரம். ஆயுளின் அந்தியத்தில் டியூப்பின் இரு பக்கங்களிலும் கருப்பு படர்ந்து விடும். ஸ்விச்சைப் போட்டால் விளக்கு 'பற்றிக்' கொள்ளாது. இப்பொழுது புதிய டியூப் செட்டு வாங்குவது நலம்.

பழைய வாழைத்தண்டைப் புதுப்பிக்க முடியாதா என்று சிலர் கேட்கலாம். புதுப்பிக்கலாம். ஆனல் புதுப்பிக்கும் செலவு புதிய விளக்குத்தண்டின் விலையை விட அதிகமாகும். 'ரிப்பேர்' செய்யப்பட்ட விளக்கின் ஆயுளும், ஒளியும் குறைந்துவிடுகின்றன. இதனல் நமக்கு நஷ்டமே தவிர லாபமொன்றுமில்லை. ஆயிரக்கணக்கான "பழைய" டியூப்களைப் பழுது பார்க்கத் தலைப்பட்டால், உயர்ந்த விஞ்ஞான மேதைகளின் பொன்னன நேரம் ஆராய்ச்சியிலேயே வீணாகிவிடும். இவ்விளக்குகள் உடைந்தால் அதனல் பேராபத்துகளும் ஏற்படுவதால் ஜாக்கிரதையாக உபயோகிக்கவும்.

—'திங்கள்'

அண்மையில் மறைவுற்ற இராவ்சாகிப் உயர்திரு.

# T. S. நடராசப் பிள்ளை அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

---

## இளமையும் கல்வியும்

உயர்திரு. தி. சு. நடராசப் பிள்ளையவர்கள் 1886–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15–ஆம் நாள் பிறந்தவர். இவருடைய தகப்பனார் சுந்தரம் பிள்ளை திருச்சிராப்பள்ளியில் சுபேதார் மேஜர் இராமசாமிப் பிள்ளை அவர்களின் புதல்வர். இராமசாமிப் பிள்ளை அங்கிருந்த துருப்புகளுக்கெல்லாம் சம்பளம் வழங்கும் வக்கீல் என்று பெயர் பெற்றவர். இவர் குடும்பத்தினரெல்லாம் இராணுவத்தில் உத்தியோகம் வகித்தவர். அக்காலத்தில் அவர்கள் திருச்சிராப்பள்ளிப் பட்டினத்தை அடக்கியாண்டு, யதேச்சாதிகாரம் செலுத்தியது சுந்தரம் பிள்ளைக்குப் பிடிக்காமல் சென்னைக்கு வந்து வியாபாரம் செய்யத் தொடங்கினார். இவர் திருவாங்கூர் திவான் பேஷ்காராயிருந்தவரும், கல்வியில் கல்லூரியில் கற்கும்போதே சிறந்து விளங்கிப் பல பரிசுகள் பெற்றவரும், கல்லூரியில் இருக்கும்போதே கல்வி முடியுமுன் திருவாங்கூரில் உத்தியோகம் வழங்கப் பெற்றவருமான பச்சையப்ப நாயகருடைய உடன் பிறந்தாள் வேதவல்லி அம்மையை மணந்தார். அவர்களுக்குத் தலைப் பிள்ளையான சண்முகம் பிள்ளை நெல்லூரில் கிரிமினல் வழக்குகளில் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லையென்று பெயர் பெற்றவர். கடைப்பிள்ளை தி. சு. நடராசப் பிள்ளை அவர்களே இன்று நம் பாராட்டுக்குரியவராய் விளங்கும் பெரியார்.

உயர்திரு. நடராசப் பிள்ளையவர்கள் தனது மாமன் கல்வியிற் சிறந்ததுபோல் தானும் விளங்க வேண்டுமென்று நோக்கங் கொண்டு மிகச் சிறிய வயதிலேயே (8 வயதில்) இராமாயணம், பாரதம், தாயுமானவர் பாடல், கிறிஸ்துவ விவிலிய நூல் முதலியவைகளைக் கற்றார். அக் காலத்தில் இருந்த C. S. M. College என்னும் கல்லூரியில் கல்வி பயின்றார். எல்லா வகுப்புக்களிலும் இவரே முதலாவதாக நின்று ஆண்டுதோறும் பல பரிசுகள் பெற்றதுமன்றிப் பள்ளியின் ஆசிரியர்களால் மிகவும் பாராட்டப்பட்டவர். இவர் மூன்றாவது பாரத்தில் படிக்கும்போதே (12 வயதில்) ஆறாம் பாரமாகிய மெட்ரிகுலேஷன் தற்போதைய எஸ். எஸ். எல். சி. வகுப்பில் ஆங்கில இலக்கண இலக்கியக் கேள்விகளுக்குப் பதிலைச் சொல்லும்படி இவரை அழைக்

துப் போகாத ஆசிரியர்கள் இல்லை. இதனால் இவருக்குப் பெருந் துன்பம் நேரிடும். 20 வயது ஆன அப்பிள்ளைகள் எல்லாம் சிறு பையனால் தாடையில் அறையப்பட்டு அவமானம் அடைந்தவர்களாகிப் பள்ளிக்கூடம் முடிந்தவுடன் இவர் பின்னால் வந்து இவரை முதுகில் அறைவார்கள். இவர் நான்காவது பாரத்தில் வாசிக்கும் போது அதன் நான்கு வகுப்புக்களிலும் (Sections) இவரே ஆங்கிலம், தமிழ், கணக்கு, சரித்திரம், பூகோளம் எல்லாவற்றிலும் முதலாவதாக வந்ததாலும், விவிலிய நூலில் கிறிஸ்தவ மாணவர்களும் விடை எழுதாத கேள்விகளுக்கும் இவர் சரியான விடைகள் தந்ததாலும், இவருடைய திறமையை மெச்சி ஸ்காத்லந்த் தேசத்துச் சீமாட்டி ஒருத்தி இவருக்கு 4, 5, 6 பாரங்களிலும் Merit Scholarship என்னும் உபகாரச் சம்பளம் உதவினார்.

மெட்ரிகுலேஷன் தேர்வை இவர் எழுதிய ஆண்டில் 100—க்குப் பதின்மூன்று பெயர்களே தேறினார்கள். இதிலிருந்து அக்காலத்தில் பரீட்சைகளின் கடினத்தைச் சொல்லவும் வேண்டுமோ! மேலும் இவர் அப்போது தான் தொடங்கிய மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுக்குப் போய், வேறு நூற்களையும் கற்கவேண்டி இருந்ததால், மெட்ரிக்குலேஷன் தேர்வில் எட்டாவதாகத் தேறினார்.

## விளையும் பயிர் முளையிலேயே

திரு. பிள்ளை அவர்கள் சிறு வயதிலேயே உயர்ந்த கொள்கைகளை உடையவராய், நீதி தவறாத நெறிமுறையில் நடந்து வந்தார். இதற்கு இவருடைய தகப்பனாரின் நல்லொழுக்கம் காரணமாயிருந்தது. இரண்டு மூன்று சமயங்களில் இவர் விளையாடுமிடங்களிலும், தெருவிலும் கண்டெடுத்த பத்து ரூபாய் நோட்டுப் பணத்தை அரசாங்கத்தாருக்கே அனுப்பி அவர்களால் நற்சாட்சிப் பத்திரம் பெற்றார். இவர் ஏழு வயதாக இருந்தபொழுது நடந்த சம்பவம் ஒன்று இவர் குணத்தை நன்கு விளக்கும். இவருடைய வீட்டின் அடுத்த வீட்டில் இவருடைய பெரியம்மாள் பெண்கள் இருவர் இருந்தனர். அவர்களில் ஒருத்தி ஒரு அஞ்சலகத் தலைவரை (Post Master) மணந்து நல்ல நிலையில் இருந்தாள். இன்னொருத்தியின் கணவனுக்கு வேலையில்லை. ஒருநாள் தெருவில் பெட்டியில் வைத்துக் கொண்டு சில பலகாரங்கள் விலை கூறப்பட்டன. அப்போது அஞ்சலகத் தலைவர் மனைவி விற்பவனைக் கூவி ஒருபைக்குத் தன் மகளுக்கு மட்டும் வாங்கிக் கொடுத்துவிட்டு, அருகே நின்ற தன தமக்கையின் மகளுக்கு ஒன்றும் கொடுக்காமல் விட்டு விட்டாள் அச் சிறு பெண் ஓவென்றலறி அழுதுத் தன் தாயைத் தாவித் தாவி முறையிட்டாள். அருகே நின்ற நடராசன் இதைத் தாளமாட்டாது

பலகாரக்காரனைக் கூவியழைத்துத் தன் தகப்பனார் அவருக்குத் தினம் ஏதாவது வாங்கித் தின்னக் கொடுக்கும் அரை அணவை எடுத்து வந்து, அந்த அரை அணவுக்கும் பலகாரத்தை வாங்கி அழுத குழந்தைக்குக் கொடுத்து விட்டார். இது உடனே அத்தெரு முழுவதும் தெரிந்து, சிறுவரும் பெரியவருமாக வந்து நடராசனை வாயார வாழ்த்தினார்கள். இதைக் கேட்ட பிள்ளையின் தாய் கண்ணீர் வரத் தன் மகனை வாழ்த்தினாள்.

## கல்லூரிப் படிப்பும் மருத்துவக் கலை அறிவும்.

பிள்ளையவர்கள் மெட்ரிகுலேஷன் பிரவேசப் பரீட்சையில் தேறிய பிறகு கிறிஸ்தவக கல்லூரியில் சேர்ந்து B. A. பட்டமும் பெற்றார்; அங்கு F. A. வகுப்பிலும், B. A. வகுப்பிலும் தமிழில் பரிசுகள் பெற்றார். இவர் டாக்டர் ஆகவேண்டுமென்று முயற்சித்தும் அச்சமயம் தன் தகப்பனருக்கு வியாபாரத்தில் உண்டான இழப்பினால் அவ் வகுப்பில் சேர முடியவில்லை. பிறகு இவரை வக்கீல் தொழிலில் சேர்த்தார்கள். பொய் முதலிய சொல்லாமல் மிகவும் உண்மையுடனும் நேர்மையுடனும் நடக்க விரும்பிய இவருக்கு இத்தொழில் ஏற்கவில்லை. மனமில்லாமல் அதில் சேர்ந்தார். பிறகு கோமளேஸ்வரன் பேட்டையில் தன் தகப்பனாரின் தமக்கை மகளை மணந்து கொச்சி திவானாக இருந்த சுப்பிரமணியப் பிள்ளையின் குமாரரும் ஊற்றுக்காடு ஜமீன்தாரரும் பெருநிதி படைத்தவருமான அரங்கநாதம் பிள்ளை அவர்களின் முதற் பெண்ணாகிய சங்கரி அம்மையாரை மணந்தார்.

## வழக்கறிஞர் வாழ்க்கை

அப்பெண்டிசைடிஸ் நோயிலிருந்து தேர்ந்தவுடன் நடராசப் பிள்ளை கடலூர் சென்று வழக்கறிஞர் தொழிலை நடத்தினார். அக்காலத்தில் சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தர் ஆதித்திராவிடரை முன்னேற்ற முயன்று ஒரு பெரும் மாநாடு கூட்டினார். அதற்குத் தலைமை தாங்கப் பலரைக் கேட்டும் அவர்கள் எல்லாம் மறுத்து விட்டார்கள். அப்போது நடராசப் பிள்ளை மிகவும் துணிவுடன் சென்று மாநாட்டை நடத்தியும் ஆதித் திராவிடருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தும் வைத்தார். இவருடைய சொற்பொழிவு பத்திரிகைகளில் வெளிவந்தவுடன் அவரை வைதும், சபித்தும் அவருக்குப் பல கடிதங்கள் வந்தன. ஒரு பிராம்மணர், "யதா யதாஹி தர்மஸ்ய தத் ஆத்மானம் ஸ்ம்ருஜாமியகம்" (எப்போது தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுத்து நிற்கிறதோ அப்போதெல்லாம் (உலகில்) நான் பிறப்பேன்) என்று கிருஷ்ணபகவான் சொன்னதையும், "பரித்ராணாகிய

சாதுனும் விநாசாய சதுஷ்கிருதாம் தர்ம ஸம்ஸ்தாபனார் தாய ஸம்பவாமி யுகே யுகே (சத்துக்களைக் காப்பாற்றவும், துஷ்டர்களை ஒறுக்கவும். யுகந்தோறும் நான் பிறக்கிறேன்) என்று அவர் கீதையில் சொன்னதையும் எடுத்துக்காட்டிப் பிள்ளைக்கு அழிவுநாள் கிட்டிற்றென ஆர்ப்பரித்தனர். அவ் வசையெல்லாம் வாழ்த்தாகக் கொண்ட பிள்ளை அவர்கள் 77 ஆண்டுகள் உயிருடனிருந்ததே பொதுத் தொண்டு கடவுளுக்கு உகந்ததெனக் காட்டுகிறதன்றோ ?

## சென்னை வாழ்க்கையும் பொதுத் தொண்டும்

கடலூர் வாழ்க்கை பிள்ளையின் உடல் நலத்துக்கு ஒத்துவரவில்லை. அடிக்கடி சுரம் கண்டது. இரவிலும் சுரம் காண இவரைச் சென்னை திரும்பும்படி சுற்றத்தார் வேண்ட அதன்படி இவர் சென்னைக்குத் திரும்பினார். பிள்ளை அவர்கள் சிறு வழக்குகளை எடுக்க மனமில்லாமல் பெரு வழக்குகளுக்காக எதிர்பார்த்தார். அவை கிட்டவில்லை. இதற்குள் மாமனார் உதவியால் சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராய் நியமிக்கப்பட்டார். ஒன்பது ஆண்டுகள் நகராண்மைக் கழகத்தில், சர் இராமசாமி முதலியார், செட்டி நாட்டரசர் இவர்களுடன் சேர்ந்து உண்மையில் உழைத்துப் பெயர் பெற்றார். ஆங்கிலத்தில் வல்லவராய் இருந்ததால் பல உபசரிப்புக் கூட்டங்களுக்கு வேண்டிய பாராட்டுரைகளை எல்லாம் இவரே எழுதுவதுண்டு. அங்கே கல்வி உட்குழுவிற்குத் தலைமை வகித்துச் சிறந்த தொண்டு புரிந்தார். அச்சமயம் இவருக்கும் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களுக்கும் பெரு நட்பு உண்டாயிற்று. நகராண்மைக் கழகத்தில் சேர்ந்த சிறிது காலத்துக்கெல்லாம் இவர் பச்சையப்பன் கல்லூரிப் பாதுகாப்பாளர்களில் ஒருவர் ஆனார். இப்போதைக்குச் சுமார் முப்பது ஆண்டுகளாக அக் கல்லூரியில் சிறந்த சேவை செய்து வந்தார். ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்து, தானே ஒரு தனிக் குறிப்பு எழுதி அனுப்புவார். அதனால் அக்கால டிரஸ்டிகள் எல்லாம் பிள்ளை அவர்களுக்கு எல்லாத் தாள்களையும் முதலில் அனுப்ப வேண்டினர். சென்னைச் சைனுபஜாரிலிருந்து இக் கல்லூரியை சேத்துப்பட்டுக் கொணர அரும்பாடுபட்ட அறநிலைய உறுப்பினர் இவரேயாவர். இவரும் காலஞ் சென்ற கல்லூரித் தலைவர் P. S. சீநிவாசாச்சாரியாரும், செட்டி நாட்டரசர் உதவியாலும் தூண்டுதலாலும் நீலகிரி சென்று, அக்காலத்தில் கல்வித்துறைஇயக்குநராயிருந்த ஸ்டாதாம் துரையைப் பேட்டி கண்டு, கல்லூரியின் நிலைமையை எடுத்துக் காட்டி அவரை வயப்படுத்தி அதைச் சேத்துப்பட்டுக்கு மாற்ற முயன்றதன் காரணமாக ஸ்டாதாம் துரையவர்களின் சிபார்சின் பேரில் அது சிறிது காலத்திற்கெல்லாம் இப்போதிருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்டது.

அதற்குத் துணையாயிருந்தவர் திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களும் ஸ்டாதாம் துரையுமாவார். ஆகவே இதற்காகச் சேரவேண்டிய பெருமை பிள்ளையவர்களுக்கே உரியது. இவர் ஏறக்குறைய 30 ஆண்டுகளாகப் பச்சையப்பன் அறநிலையப் பாதுகாவலராக இருந்து வந்தார். மும்முறை தலைவர் ஆகவும் ஆனார். மேலும் செங்கல்வராய நாயகருடைய தொழிற்சாலையில் வாசிப்போருக்குப் பட்டம் அளிக்காமல் அரசாங்கத்தார் மறுத்து வந்தார்கள். அதற்காகப் பிள்ளையவர்கள் அரும்பாடு படடுக்கொண்டு வந்தார். இறுதியில் 1936 ஆம் ஆண்டில் சர். பி. டி. இராஜன் அபிவிருத்தி அமைச்சராக வந்த காலத்தில் அவரைத் தொழிற்சாலையின் ஆண்டு விழாவிற்கு வரவழைத்து அவரிடம் பிள்ளைகள் லண்டன் பரீட்சையிலும் எளிதில் தேறக் கூடிய வல்லமையிருந்தும் அவர்களுக்குச் சென்னை அரசாங்கப் பரீட்சைக்குப்போக இடங்கொடுக்கவில்லை யென்றும், அக்குறையை நீக்க வேண்டியது அவருடைய கடமையென்றும் தெரிவித்து, அதைத் தொடர்ந்து பல பேரிடம் சென்று பேட்டி கண்டும், அடுத்த ஆண்டில் அரசியல் செக்ரிடேரியாயிருந்தல். J. பால் என்பவரிடம் சென்றும் அவருடைய தயவால் L. M. P., L. E. E. பட்டங்கள நாயகருடைய பள்ளிப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டன. இதை 1936, 1937 ஆம் ஆண்டுகளில் பிள்ளையவர்கள் எழுதிய Commemoration Address-ல் பாக்கக் காணலாம ஆகையால் மேற்சொன்ன கல்விச் சாலைக்கு இவர் செய்த பேருதவி இது. பிள்ளையவர்களின் வாழ்க்கையில் பெரும் புகழுக்குரிய செயலாய் இது என்றென்றும் போற்றப்பெறும்.

## பழுத்த தமிழ்ப் புலமை

பிள்ளையவர்கள் தமிழில் பயிற்சி உடையவர் என்று மேலே சொல்லப்பட்டது. இவர் பற்பல திங்கள், வார இதழ்களுக்குப் பல கட்டுரைகள் எழுதி இருக்கின்றார். முக்கியமாகத் தமிழில் மிகவும் கலைஞரான சேஷாச்சலம் ஐயர் அவர்கள் நடத்தி வந்த "கலாநிலய"த்தில் இவர் பல கட்டுரைகள் எழுதி இருக்கிறார். அவற்றில் முக்கியமானவை வில்லிபுத்தூரார் பாரத ஆராய்ச்சியும் ஆங்கிலப் புலவரான சர் வால்டர் ஸ்காட் எழுதிய கவிதா ரூபமான Lady of the Lake என்னும் சிறுகதையின் மொழி பெயர்ப்பும் ஆகும். வில்லிபுத்தூரார் பாரத ஆராய்ச்சி, புது முறையில் ஆங்கிலக் கட்டுரைகளை ஒட்டி, மிகவும் நன்றாகவும், மிகவும் எளியதாகவும் எழுதப்பட்டது. Lady of the Lake என்னும் ஆங்கில நூல் 'இலஞ்சிப் பாவை' என்ற பெயரில் முதலில் சாதாரண, எளிய நடையில் மொழியாக்கம் செய்யப்பட்டதேனும் பிறகு சேஷாச்சலம் ஐயரின் தூண்டுதலின் பேரில் மிகவும் உயர்ந்த (சற்றே கடினமான)

நடையில் எழுதப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர, லோகோபகாரியில் பல கம்பராமாயணக் கட்டுரைகளும் சிறப்பாக நகைச்சுவை பற்றியும், 'திருமணக் கோலங்கள்' 'கம்ப சூத்திரம்' என்னும் தலைப்பில் பல கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. 'சந்திரிகா' என்னும் ஒரு நாடகமும் எழுதினார்.

'சுதேசமித்திரன்' என்னும் பத்திரிகையில் சிற்சில இலக்கியக் கட்டுரைகளும், கருவில் உண்டாகும் குழந்தை ஆண்பாலாகவும், பெண்பாலாகவும் மாறுவதெப்படி என்று விளக்கிக் காட்டி, 'ஆணா பெண்ணா' என்ற தலைப்பின்கீழ் ஒரு கட்டுரையும், 'பெயர் விநோதங்களும் புலவர்களும்' என்ற தலைப்பின்கீழ் 'அணிலாடும் முன்றிலார்' 'மீன் எறி தூண்டிலார்' முதலிய சங்கப் புலவர்கள் எழுதிய பாக்களைப் பற்றிய கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன.

அப்போதைக்கப்போது பச்சையப்பன் கலை மலரில் (Magazine) பச்சையப்ப முதலியாரைப் பற்றி இவர் எழுதிய கட்டுரைகள் சிறந்தவையெனப் பாராட்டப் பெற்றன. புதிதாகத் துவக்கப்பட்ட மயிலாப்பூர் பத்திரிகை ஒன்றில் 'கணவனைத் தின்னும் மனைவிமார்' என்னும் கட்டுரை மிகவும் அழகாக இருந்ததோடு ஓதினவர்களையெல்லாம் திடுக்கிடச் செய்தது. கோயம்புத்தூரிலிருந்து வெளிவரும் சிறந்த இதழாகிய 'கலைக்கதிர்'ல் திருநாவுக்கரசு நாயனாரைப்பற்றி இவர் எழுதிய கட்டுரை சிலரால் உயர்ந்ததெனப் பாராட்டப் பெற்றும் சிலரால் வழிவழிவந்த சரித்திரத்திற்கு மாறானதால் கொள்ளத்தக்கது அன்று என்று புறக்கணிக்கப்பட்டும் விவாதத்திற்கு உட்பட்டு நின்றது.

இவர் 1940 முதல் 42 வரை செங்கற்பட்டு மாவட்டத்தில் தேசியப் போர் முனையின் அதிகாரியாக இருந்து வந்தார். அச்சமயத்தில் மாவட்டம் முழுவதையும் சுற்றி வந்து, ஆங்காங்கே பற்பல சிறந்த சொற்பொழிவுகள் செய்துகொண்டு வந்தார். அந்தக் காலத்தில் இவர் வானொலி நிலையத்திலிருந்து இலக்கியங்களைப் பற்றிச் சில சிறந்த சொற்பொழிவுகள் செய்துள்ளார். அவற்றுள் சிறந்தவை 'வாகீசர் வாக்கு,' 'தசரா' 'கவிதா வாசகம்' என்னும் தலைப்பின்கீழ் 'சடகோபரந்தாதியைப்பற்றி ஒரு விமரிசனம்' ஆக இவைகளை மிகவும் அழகாகச் செய்துள்ளார். 'ஆரியன்' என்னும் பத்திரிகையில் 'சிலந்தியின் செயலும் காதலும்' என்னும் தலைப்பின் கீழ் விநோதமானதும், நகைப்புக்கு இடமானதுமான ஓர் கட்டுரை இவரால் எழுதப்பட்டிருக்கிறது. இவைகளைத் தவிர இவருக்கு வடமொழியிலும் சற்றே பழக்கமுண்டு. ஆதலால் 'கம்பரும், வால்மீகியும்' என்று ஒரு சிறந்த கட்டுரை எழுதியுள்ளார்.

## கல்வித்தொண்டு

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் அங்கத்தினராக இருந்து ஊழியம் செய்து வந்திருக்கிறார். அதே போல் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் சிறந்த பணியாற்றி இருக்கிறார். இவைகள் எல்லாவற்றிலும் சிறந்ததாகத் திரு. இரத்தின சபாபதிப் பிள்ளை அவர்களின் அனாதைப் பெண்கள் விடுதியில் தலைமை வகித்து, அதிலுள்ள சிறுமியர்களுக்குத் தானே நேரில் சென்று ஆங்கிலம், தமிழ், கணக்கு முதலிய எல்லாத்துறைகளிலே யும் அவர்களைத் தேற்றி வந்துள்ளார். இவர் கைம்மாறு வேண்டாத கடப்பாடுடன் இங்குச் செய்துவரும் ஊழியமே இறைவனுக்கு ஏற்றது என்று எண்ணி வருகிறார். இந்த விடுதியில் வாசித்த பெண்கள் பலர், ஆசிரியைகளாகவும், நர்சுகளாகவும், மருத்துவச்சி களாகவும் இருந்து வருகிறார்கள். இந்த விடுதிக்கு அரசாங்கத்தார் கொடுக்கும் சன்மானம் குறைந்த அளவாக இருந்து வந்ததனாலும் உணவுக்குத் தவிர உடுப்பு முதலியவைகளுக்கும், குறிப்புப் புத்தகம் முதலியவைகளுக்கும், குமாஸ்தாக்களுக்குச் செலவழிக்கப்படும் தொகைகளுக்கும் சன்மானம் கொடுக்கப்படாததால் சென்னை மாநிலத்திலுள்ள எல்லா விடுதிகளையும் ஒன்றாகச் சேர்த்து, 'விடுதிகளின் குழு' என்ற பெருங் குழுவை உண்டாக்கி அதன் மூலமாக அமைச்சர்களையும், பொதுக் கல்வி இயக்குநரையும், இன்னும் இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கண்டு இந்த விடுதிகளுக்காக உழைத்து வந்திருக்கிறார். அதன் பயனாக அரசாங்கத்தார் கொடுக்கும் சன்மானம் ஆள் ஒன்றுக்கு மாதம் ரூ. 8—லிருந்து ரூ. 10—ஆக உயர்த்தப்பட்டும், குமாஸ்தா சம்பளம், சோப்பு, நோட்டுப்புக்குகள் முதலியவைகளுக்காகச் செலவழிக்கப்படும் பணம், சன்மானத்துக்காகக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டும் வருகிறது. தவிரவும் 4, 5, 6 பாரங்களில் வாசிக்கும் பிள்ளை களுக்குப் பள்ளிக்கூடங்களில் சம்பளம் இல்லாமலும், அவர்கள் ஓர் முறை வகுப்புக்களில் தேறத் தவறிவிட்டாலும் மறு ஆண்டிலும் அதேபோல் சம்பளமில்லாமல் வாசிக்க வசதியும் வாங்கித் தந்திருக்கிறார். இன்னும் இவர்களுடைய நன்மைக்காக உழைத்த உழைப்பின் பயனாக C. S. W. Boardலிருந்து திரு. T. R. S. பெண்கள் விடுதிக்குச் சிறந்த சன்மானம் பெற்று, பெண்களின் அபிவிருத்திக்காகத் தையல் மிஷின்கள், டைப்ரைட்டர், பீரோக் கள், எவர்சில்வர் தட்டுகள், விளையாடும் ஏணி, ஊஞ்சல் முதலி யவைகளையெல்லாம் வாங்கித் தந்திருக்கிறார்.

இன்று ஏறக்குறைய 30 ஆண்டுகளாகப் பச்சையப்பன் கல்லூரிப் பாதுகாப்பாளரில் ஒருவராக இருந்து வந்ததன்

பயனுக நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு உயர்தரக் கல்வி வசதியும், சுமார் ரூ. 10,000க்குப் பள்ளிக்கூட சம்பள உதவியும், புத்தக உதவியும் செய்து வந்திருக்கிறார். இவர்களிலே நன்றியறிவுள்ள சிலர் ஒன்று சேர்ந்து, இவர் செய்த இந்த உதவிகளுக்கும், ஆங்கிலத்திலும், தமிழிலும் இவருக்கிருக்கின்ற புலமையையும் பாராட்டி 1960—ஆம் ஆண்டில் பொன்னாடை போர்த்தினார்கள்.

மேலும் இவர் Children Aid Society என்னும் குற்றத்திற்குள்ளான பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காகவும், நல்லொழுக்கத்திற்காகவும் ஏற்படுத்தப்பட்ட சங்கம் ஒன்றில் சேர்ந்து அதன் உபதலைவராகவும் உழைத்து வந்திருக்கிறார். கீழ்ப்பாக்கத்தில் உள்ள இந்திய மருத்துவக் கல்லூரி ஆலோசகராகவும் இருந்து இவர் ஆற்றிய தொண்டு போற்றற்குரியது. இவைகளில் எல்லாம் ஊதியம் பெறுமலும், பணிசெய்து கிடப்பதே தனக்கேற்பட்ட தொழில் என உறுதியாய் நம்பியும் வேலை செய்து வந்திருப்பதும், இவர் மக்களுக்காக உழைக்கவேண்டுமென்னும் எண்ணம், உடையவராய் 'கர்மண்யேவ அதிகாரஸ்தேமா பலேஷு' என்று கீதையில் சொல்லிய கட்டுரைக்கு இணங்கவும், பொது மக்களுக்கு உழைத்தலையே கடவுள் தனக்காக உழைத்ததாகக் கொளவார் என்று இயேசு கிறிஸ்து சொல்லியதற்கு ஏற்பவும் பணியாற்றி வந்திருப்பதும் போற்றத்தக்கது.

உயர்திரு பிள்ளையவர்கள் மங்கலமாய மனைமாட்சியைக் கண்டவர்கள்; அதன் நன்கலமாய நன்மக்கள் பேற்றையும் பெற்றவர்கள். இவர்களுடைய மகள் திருமதி இலக்குமி சீனிவாசன், பி.எஸ்.சி. (ஆனர்ஸ்)—எல் டி (B.sc., (Hons.) L.T.) பட்டம் பெற்றவர்கள். சேவா சதனம் பெண் பாடசாலையில், ஆசிரியையாய்ப் பணியாற்றுபவர்கள்.

பிள்ளை அவர்களுடைய மகன் திரு. டி. என். சந்திரசேகரன், எம். ஏ. பட்டம் பெற்றவர். பம்பாயில் வணிக இலச்சினை ஆய்வாளராக (Examiner of the Trade Mark, Bombay) இருப்பவர். இந்த மகள் வழியாகவும் மகன் வழியாகவும் பிள்ளையவர்கள் பெற்றிருக்கும் பேரப் பிள்ளைகள் பலர். அவர்கள் அனைவரும் அறிவு நலஞ் சான்றவர்கள். மருத்துவத்துறையிலும் பொறியியல் துறையிலும் பயின்று வருபவர்கள்.

இத்தகு சிறப்புக்கள் யாவும் ஒருங்கு அமையப்பெற்ற பிள்ளை அவர்கள் சென்ற மாதத்தில் இயற்கை எய்தியது, தமிழகக் கல்வி உலகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

— "குருகுலம்"

# வாழைத்தண்டு விளக்கு

[ஜகதீஸ்வரி]

திரு கிருபானந்தவாரியார் புது வையில் "ஆனைமுகனும், ஆறு முகனும்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றும் பொழுது "டியூப்லைட்"டை வாழைத்தண்டு விளக்கென்று குறிப்பிட்டார். அவர் இட்ட பெயர் மிகவும் பொருத்தமாய் இருப்பதாகத் தோன்றியதால். அதைக் குறித்த இந்தக் கட்டுரைக்கு மேற்கண்ட தலைப்பைத் தந்திருக்கிறேன். உருவ ஒற்றுமையைத் தவிர வாழைத்தண்டிற்கும் டியூப் லைட்டிற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது.

இந்தக் காலத்தில் ஜனங்கள் டியூப்லைட்டை அதிகமாக உபயோகித்து வருகிறார்கள். சாதாரண "பல்பு"கள் சில காலத்தில் நம் வீடுகளிலிருந்து மறைந்து விடலாம்.

டியூப் லைட்டு வீட்டிற்கு அழகு தருவதோடு "பகல் ஒளியை"த் தருகிறது. இரண்டு அடி விளக்கினால் ஒரு பெரிய அறையை ஒளி மயமாக்கி விடலாம். அதே அறைக்குச் சாதாரண பல்புகள் குறைந்தது நான்காவது தேவைப்படும். ஆகையினால் "வாழைத் தண்டின்" உபயோகத்தினால் மின்சாரச் செலவு ஓரளவுக்குக் குறைகின்றது. இப்பேர்ப்பட்ட முக்கியத்துவம் பெற்று வரும் "டியூப் லைட்டு"களின் உபயோகங்களைப்பற்றி நாம் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

வாழைத்தண்டு விளக்கில் சாதாரண பல்பில் உள்ளது போல் திரி கிடையாது. நம் கண்ணில்படும் கண்ணாடிக் குழையின் உள்பாகம் ஒருவகையான ரசாயனம் தடவப்பட்டு, குழைக்குள் ஒருவிதமான வாயு நிரப்பப் படுகிறது. மின்சார சக்தியை எலக்ட்ரோட்ஸ் எனப்படும் சிறு கம்பிகளின் வாயிலாகச் செலுத்தும் பொழுது குழைக்குள் வெளிச்சம் உண்டாகிறது. இதைக் கேட்கும்பொழுது "பூ இவ்வளவுதானா" என்று உங்களுக்குத் தோன்றும். ஆனால் இந்த விளக்குகளைச் செய்யும் தொழிற்சாலைக்குள் சென்று பார்த்தோமேயானால், மனிதனுடைய மேதை எவ்வளவு அற்புதமானது என்று வியக்காமலிருக்க முடியாது.

இந்தத் தொழிற்சாலையில் விளக்குகளுக்காகக் கண்ணாடிக் குழைகளை அளவுவாரியாக அறுப்பது முதற்கொண்டு, தீர்ந்த விளக்காக வெளியில்

வரும்வரை உள்ள எல்லா வேலைகளையும் இயந்திரங்களே செய்து விடுகின்றன. ஆகையினால் தொழிலாளிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும். இயந்திரத்திற்குள் குழைகளைச் செலுத்தவும், ஒரு மெஷினிலிருந்து வெளிவரும் சாமான்களை மற்றொரு இயந்திரத்திற்குத் தருவதற்காக மாத்திரம்தான் தொழிலாளிகள் தேவைப்படுகிறார்கள். மனிதனுடைய உதவியில்லாமல் இயந்திரங்களே எல்லா வேலைகளையும் செய்வதைப் பார்க்க மிகவும் வேடிக்கையாக இருக்கும். ஆனால் வாழைத்தண்டு விளக்கின் உற்பத்தியின் ஒவ்வொரு கட்டமும் விஞ்ஞானிகளால் நன்கு பரிசோதிக்கப்படுகிறது, ஆகையினால் இந்தத் தொழிற்சாலைக்குச் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிசாலைகளில் நூற்றுக்கணக்கான பௌதிக விஞ்ஞானிகளும் ரசாயன விஞ்ஞானிகளும் வேலை செய்கிறார்கள்.

கண்ணாடிக் குழை முடிந்த டியூப் லைட்டாவதற்குள் அநேக கட்டங்களைத் தாண்டவேண்டும். அவைகளில் சில முக்கியமானவை மாத்திரம் அடியிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

தயாரிக்கப்பட்ட விளக்குகளைப் பரிசோதனை செய்வது மிகவும் முக்கியமானது. விளக்குகளை அடுக்கடுக்காக ஒரு இயந்திரத்தில் வைக்கிறார்கள். அந்த இயந்திரம் தானகவே சரியில்லாத விளக்குத் தண்டுகளை அப்புறப்படுத்துகிறது. சரியில்லாத டியூப்களை ஆராய்ச்சிசாலைகளில் 'ஏன் சரியில்லை?' என்று உடனடியாகச் சோதித்துப்பார்ப்பார்கள். ஆராய்ச்சிசாலையில் கண்டுபிடித்த காரணங்களைக்கொண்டு விஞ்ஞானிகள் டியூப்களின் எண்ணிக்கையைக் குறைக்கப் பார்ப்பார்கள்.

இந்த இலாகாவில் எக்ஸ்ரேயின் உதவியினால் தீர்ந்த விளக்குத் தண்டுகளைச் சோதனை செய்வார்கள்.

இவ்வளவு கட்டங்களையும் தாண்டி வாழைத்தண்டு "பரிமாண" அளவு இலாகாவுக்கு அனுப்பப்படுகிறது. இந்த இலாகாவில் "ஒளி" இஞ்சினீயர்கள் டியூப்பிலிருந்து வரும் ஒளியின் அளவையும், அந்த டியூப்பிற்குத் தேவையான மின்சார சக்தியையும் அளந்துவிடுகிறார்கள்.

ஒளியும் அளவிடப்படுகிறது என்று கேட்க நமக்கு வியப்பாக இருக்கும். ஒளியின் அளவை "லூமன்" என்ற பரிமாணத்தால் குறிப்பிடுகிறார்கள். மின்சார சக்தியை "வாட்ஸ்" என்று குறிப்பிடுவார்கள்.

இவ்வளவு இன்னல்களையும் முடித்துக் கொண்டு வாழைத் தண்டு விளக்கு நம் கைக்கு வந்து சேருகிறது.

வாழைத் தண்டுகளுக்கு ஆயுள் சராசரியில் 5000 மணி

(6—ம் பக்கம் பார்க்க)

# வள்ளுவர் வகுத்த பொருளாதாரம்

(டாக்டர் பா. நடராஜன்)

"பொய்யில் புலவராகிய வள்ளுவர் மெய்ஞ்ஞானி, பேரறிஞர், அரிய கவிஞர் ஆவர்; வையத்திலே வாழ்வாங்கு வாழும் வழிகளை வகுதத சமூக அறிஞர்; சமய நெறியில் சமத்துவம் கண்ட சமரச ஞானி; இம்மைக்கும் மறுமைக்கும் இணைப்புக் கண்ட தீர்க்கதரிசி; இயல்பினான் இவ்வுலக வாழ்வை நடத்துபவர் மண்ணிலே வாழ்பவராயினும் விண்ணகத்து வாழும் வானவர்க்கு ஒப்பாவார்" இவ்வாறு 1961 ஜனவரி 13 அன்று, அப்போது டில்லி, தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் கழக இயக்குநராக விளங்கிய டாக்டர் பா. நடராஜன் சென்னைப் பல்கலைக் கழக செனட் மண்டபத்தில் வள்ளுவரின் 'பொருளாதாரக் கொள்கைகளும் குறிக்கோள்களும்' என்னும் சொற்பொழிவு வரிசையில் முதலுரையை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை ஏற்படுத்தியுள்ள "சொர்ணம்மாள் அறநிதி"யின் ஆதரவில் டாக்டர் நடராஜன் நிகழ்த்திய பேருரைகளில் இது முதற் சொற்பொழிவாகும்.

## மறுமைக்கு இடமில்லை

தமிழகத்தின் பொற்காலம் எனச் சங்க காலம் போற்றப்படுகிறது. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் போரையும் காதலையுமே நோக்கமாகக் கொண்டிருந்தன. இம்மைச் செய்தன மறுமைக்காமென என்னும் இயல்பு பெரிதும் அந்நாளிலே இருந்ததில்லை. சங்க இலக்கியங்களில் அறம் பொருள் இன்பம் ஆகிய முப்பகுதிகளே பேரிடம் பெற்றன. "அறமும் பொருளும் இன்பமும் என்றாங்கு" எனத் தொல்காப்பியரும், 'சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல' எனப்புறப்புலவரும் குறிப்பிட்டார். முப்பொருளையும் முறையே பெறின் அவற்றின் பயனை பேரின்பத்தைப் பெறலாம் என்பது சங்கப் புலவர்கள் கருத்தாயிருந்தது போலும்! எனவே ஆங்காங்குத் தெய்வம் பற்றிய சொற்களும் தெய்வ வழிபாட்டுக் குறிப்புகளுமே சங்க இலக்கியத்தே இடம் பெற்றன. சுருங்கச் சொல்லின் பழந்தமிழிலக்கியங்கள் போரையும் காதலையும், விரித்த அளவு மறுமையைப்பற்றி விரித்துக் கூறவில்லை. எனவே, புலவர் கவிதைகளும், மக்கள்–வாழ்வு ஆகிய இவ்விரண்டிலுமே மூழ்கி விட்டன.

## இம்மையும் மறுமையும் இணைந்த வாழ்வு

இந் நிலையில் சமணரும் சாக்கியரும் தமிழகத்துப் போந்தனர். தமிழர்தம் அந்நாளைய வாழ்வை மாற்றும் கருத்துக்களைப் பரப்பினர். 'இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா, வளவியவான் பொருட் செல்வமும் நில்லா, புத்தேளுலகம் புதல்வரும் தாரார்' எனப் பறைசாற்றினர்; புலனைந் தும் வென்றான் தன் வீரமே வீரமென்றனர். "வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்" என்ற முறையிலே ஜைன புத்த மதங்களின் போதனைகள் அமைந்தன. கவிஞர்களின் கருப் பொருளாக மறுமையே பேரிடம் பெற்றது. அறம் பொருள், இன்பமுமாகிய முப்பொருளுக்கும் மேலாக வீட்டின்பத்தையே வற்புறுத்தினர். இங்ஙனம் இம்மைக்கே முதலிடம் கொடுத்த சங்கப் புலவர்க்கும் மறுமைக்கே சிறப்பிடம் கொடுத்த ஜைன, புத்தருக்கும் இடையே இவ்விரண்டையும் இணைத்த வாழ்வை நடத்த வள்ளுவனார் திருக்குறள் அமைத்தார். இம்மை வாழ்விலே மூழ்கிக் கிடத்தலும் மறுமைக்காக இம்மையை முற்றிலும் துறத்தலும் ஓர் சமூகத்தைக் குலைத்து அழித்து விடும் என வள்ளுவர் உணர்ந்தார். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பாலமைத்தார். அறத்திலே இல்லறமும், துறவறமும் கண்டார்; பொருட்பாலில் ஆட்சியும், அரசியலும் கண்டார்; இவ்விரண்டிற்கும் சுவையூட்டி நிற்கும் இன்பத்துப்பாலைக் கவி நலம் கனியக் கூறினார். எனவே, இம்மையின்பமே நிலையென எண்ணிக்கிடந்த இனத்திற்கும் துறவறமே பெரிதென எண்ணி வாழ்வைச் சுமையாக்கிக் கொண்ட இனத்திற்கும் அறிவுச்சுடர் கொளுத்தும் வகையிலே வள்ளுவர் திருக்குறள் அமைந்தது.

## வகுத்த வழி

காமவின்பமே பெரிதென மயங்கியோரைத் தெளிவிக்கப் பிறனில் விழையாமையை வகுத்தார். 'உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேமெனல்,' என இடித்துரைத்தார். "சிற்றின்பம்வெஃகி அறனல்ல செய்யாரே மற்றின்பம் வேண்டுபவர்" என வற்புறுத்திக் கூறினார். இம்மை வாழ்வின் உயிர் நாடியாகிய இல்லறத்திலே அன்பு தளிர்க்க வாழ்க்கைத்துணை நலம் சிறக்க, மக்கட்பேறு கனிய, விருந்தோம்பி இனியன கூறி, செய்ந்நன்றி உணர்ந்து, நடுநிலை நின்று அடக்கமும் ஒழுக்கமும் ஓம்பிப் பொறுமையை ஓம்பி, பொறாமையைப் போக்கி, புறங் கூறல் அகற்றி, தீவினைக்கஞ்சி பயன் மரம்போல் பல்லோர்க்குதவும் ஒப்புரவுணர்ந்து, ஈகை நிறைந்து புகழுடன்பொலிய வள்ளுவர் வழிகளை வகுத்தார்.

துறவிலே அருளமைந்து கொலையும் புலையும் நீக்கி, உற்ற நோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாத் தவ வாழ்க்கையைக் கூறுகிறார்.

இங்ஙனம் இகபர வாழ்விலே உறுதி உணராது உண்மை தெளியாது கலங்கிக் கிடந்த மக்களுக்கு நடுநிலை நின்று நன்னெறி காட்டிய பெருமை வள்ளுவரையே சாரும்.

### மக்கள் கவிஞர்

வள்ளுவர் காவியம் பாடக் கருதவில்லை. கற்பனை நூல் செய்ய விரும்பவில்லை. மாநில மன்னரையோ குறுநிலச் செல்வரையோ மகிழ்விக்க நூலை எழுதவில்லை. அவர் மக்கள் கவிஞர். மக்கள் மக்களாக வாழ வேண்டும். மக்களாக வாழ்ந்து இம்மை மறுமை எய்தவேண்டும். மிகினும் குறையினும் நோய் செய்யும் என்னும் வகையில் இருவகை வாழ்வையும் மக்கள் பெறக் கருதினார். ஆதலின் மக்களின் மனதிலே பதியத் தகும் முறையிலே நூலை எழுத முயன்றார். நெடிய செய்யுட்கள் எல்லோர் நெஞ்சிலும் நிலைத்தலரிது; வாழ்விலே சுழலும் மக்களுக்கு அறநெறியைப் பசுமரத்தாணி போலப் பதிய வைப்பதற்குச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கத் தக்கதோர் கருவி ஈரடிகளாகிய குறள் எனவே கருதினார். குறட்பா மங்கையர் இல்லங்களிலே கூறும் பழமொழிகள் போல மக்களது மனத்திலே பதியுமென எண்ணினார். பண்ணையிலே பாடுபடும் பாட்டாளி முதலாகப் பாரையாளும் மன்னவர் ஈறாக அனைவரது இதயத்திலும் பதிந்து நிற்கும் குறட்பாவைத் தேர்ந்தே தம் அரிய கருத்துக்களை அதில் அமைத்தார். கல்வி கரையில; கற்பவர் நாள் சில; மெல்ல நினைக்கின் பிணி பல; ஆதலின் அறியத் தக்கனவற்றை அறிய வேண்டியவற்றை, அனைவரும் எளிதில் பதிக்கத்தக்க—பாக்களில் எல்லாம் சுருங்கிய "குறள்" என்னும் பாவிலே அமைத்து வள்ளுவர் கூறினார். ஏழு சீர்களிலே எண்ணிய கருத்துக்கள் அனைத்தையும் எளிய முறையில் விளக்கியபெருமையை எண்ணும்போது தெய்வப் புலவர் திருவள்ளுவர் எனச் சான்றோர் அவரைப் போற்றியமை மிகவும் பொருத்தமென்பதில் ஐயம் சிறிதுமில்லை.

### சமுதாயத்தின் நான்கு தூண்கள்

கடவுளுணர்வு, பொருள் வளம், துறந்தார், அறம் ஆகியவற்றை அவர் கண்ட சமுதாயத்தின் நான்கு தூண்களாக அமைத்திருக்கிறார்.

கடவுளுணர்வு மக்கள் மனதிலே ஊன்றி நிற்க வேண்டும். கற்பவை அனைத்தும் கடவுளை உணர்தற் பொருட்டேயாம். 'ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் கற்றாலும் ஆண்டவனை அறியவில்லையேல் கற்றதனாலாய பயன் என்?' எனக் கேட்கிறார் வள்ளுவர். மனக் கவலையால் அல்லும் பகலும் அலையும் மக்களுக்கு அக் கவலை மாற்றும் மருந்து தனக்கு உவமையில்லாதான் தாளேயாகும் பிறப்பெனும்பெருங்கடலில்

வீழ்ந்து கரை காண வியலாது கலங்கும் மக்களுக்குக் கடவுளின் திருவடியே தெய்வமாகும். அத்தகைய ஆண்டவன் நிலையை அனைவரும், எந் நாட்டவரும், எம்மொழியினரும் உணரும் வகையில் உவமை வாயிலாக வள்ளுவர் விளக்குகிறார். மொழிகள் அனைத்தும் முதல் ஒலியாய 'அ' காரத்தையோ அகரத்தின் சார்பான ஒலியையோ கொள்கின்றன. 'அங்காத்தலாகிய வாய் திறத்தல் அளவிலேயே தோன்றுவது அ, ஆ. அங்காப்புடைய' என்றார் பிறரும். எனவே இயல்பினால் எழும் ஒலிபோல் எனைய ஒலிகளுக்கெல்லாம் முதல் ஒலியாய், ஆதிஒலியாய் அனைத் தொலிகளிலும் கலந்து மறைந்தும் வெளிப்பட்டும் ஊடுருவி நிற்கும் 'அ' போல ஆண்டவன் உலகிற்கெல்லாம் முதலாய் உலகப் பொருளில் எல்லாம் ஊடுருவி, கரந்தும் வெளிப்பட்டும் உள்ளான் என்பதை 'அகர முதல' எனும் முதற் குறளின் வாயிலாக வியத்தகு முறையில் விளக்குகிறார். 'அ' என்பதே அங்காத்தல் அல்லது வாய் திறத்தல் எனப் பொருள்படும். வாய்திறத்தலின்றி எவ்வொலியும் எவ்வெழுத்தும் எழுதல் இல்லை. இறைவனன்றி எதுவும் இல்லை - எப்பொருளும் இல்லை எனச் சுருக்கமாக அங்கிங்கெனாதபடி எங்கும் உள்ள இறைவனை விளக்குகிறார்.

## பொருளின் பெருமை

உலகம் இயங்க, அமைதியும் வளமும் இன்பமும் பெற்றுவாழ, நீதியும் நேர்மையும் நிலவ, அறமும் அருளும் தவழ அடிப்படையாய் இருப்பது பொருள்; வையகத்தே பொருள் எல்லாம் தழைக்கவும் செழிக்கவும் மழையே காரணமாக இருக்கிறது; மழை இல்லையேல் மாநிலம் இல்லை; உழவு இல்லை; தொழில் இல்லை; சமூகம் இல்லை; தானம் இல்லை; தவம் இல்லை; பூசனை இல்லை, ஆடல், பாடல், கலை, காவியம், அரசு, ஆட்சி, நாடு, குடி எதுவுமே இல்லை எனவே வள்ளுவரின் 'பொருளாதாரத்திற்கு உயிராக அடிப்படையாக இருப்பது மழையே என அவர் கருதுகிறார். இன்றைய பொருளாதாரப் புலவர்கள் பொன்னையும், இரும்பையும், செம்பையும், மின்சாரத்தையும் சிறப்பெனப் பேசலாம். எனினும் இவை அனைத்து மிருப்பினும் மழையில்லையேல் பயனில்லை. இவற்றைப் பயன்படுத்த வழியில்லை. உண்ணும் உணவை உண்டாக்கி உண்ணற்குரிய நீராகவும் உதவுகிறது மழை. பரந்த விரிந்த ஆழ நெடுங்கடலும் மழையில்லையேல் தன் தன்மையில் நின்று குறைந்து விடும்; மக்களையும் மற்ற உயிர்களையும் இடையறாது வாழையடி வாழையாக வாழ வைப்பது மழை; எனவே அதனை வானோர் உண்ணும் சாவா மருந்தாகிய 'அமிழ்தம்' என்கிறார் வள்ளுவர். பசி உடற்றும் சமுதாயத்திலே ஆன்மீகவளர்ச்சிக்கு வழியே இல்லை. ஆண்டவன் உணர்ச்சியும் அறவுணர்ச்சியும் இல்லாது போகும்.

எனவே, உலகப் பொருளாதாரத்திற்கு உயிராக நின்று நிலவுவது—நாடு. அமைதியுடன் வாழ அச்சாணியாக உதவுவது மழையே என வள்ளுவர் உணர்ந்து பொருளாதாரத்தின் அடிப்படையாக மழையைக் கருதி வான் சிறப்பைக் கூறுகிறார்.

## ஒழுக்கத்தின் சிறப்பு

மழை மலிந்து வளம் கொழிப்பினும் வையகத்தே மக்களை வாழும் வகையில் வாழ்வதற்கு வழி காட்டுபவர்கள் ஒழுக்கத்தில் நின்ற உரவோராவர். அவர் தம் பெருமையை வரையறுத்து எவராலும் கூற இயலாது. அறிவு எனும் அங்குசத்தால் ஐம்புலன்களாகிய யானைகளையும் சென்ற விடத்தால் செல்லவிடாது, நன்றின் பால் செலுத்தும் மெய்யுணர்ந்த மேலோர்கள் உலகிற்கு இன்றியமையாதவராவர். அவர்கள் எல்லோராலும் செய்ய இயலாத அரிய செயல்களைச் செய்யும் பெரியோராவார். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐவகையையும் ஆய்ந்துணர்ந்தவர்கள். அவர்கள்வாழ்த்தின் உலகம் வாழும். வருந்தின் உலகம் தாழும். அவர் தம் மொழியே ஆக்கவும் அழிக்கவும் வல்ல நிறை மொழி. குணமென்னும் குன்றின் மீது நிற்கும் அந் நீத்தார் செந்தண்மை பூண்ட அறவோர்; அந்தணர். அவராலாயே உலகம் நன்னெறி செல்லும்.

சமுதாயத்தின் நான்காவது தூணாக நிலவுவது அறம் எனக் கூறுகிறார் வள்ளுவர். இம்மையும் மறுமையும் தருவது அறமாகும். ‘மனத்திலே மாசற்ற தன்மையே அறம்’ எனவள்ளுவர் அறத்திற்கு இலக்கணம் வகுக்கிறார். பொறாமை, பேராசை, கோபம், கொடுஞ்சொல் ஆகிய நான்கும் நீங்கிய வாழ்வே அற வாழ்வு. நீக்கிய செயலே அறச் செயல்; அத்தகைய அற வாழ்வால் அடைவதே இன்ப வாழ்வு. இனிய வாழ்வு புகழுடைய வாழ்வு. இத்தகைய அறத்தை இயன்றவரை செய்க; இடையறாது செய்க; அறம் செய்யாது வாழ்நாள் ஆகாது என்று செய்க; எந்நாளும் செய்க; எப்போதும் செய்க; பின்னர் செய்வோம் எனக் கருதாது இன்றே செய்க; அவ்வாறு செய்யும் அறமே அனைத்தும் அழியினும் அழியாது நிற்பது—நிலைப்பது—என்றும் மாயாத்துணை; பொன்றாத்துணை என வள்ளுவர் அறத்தின் பெருமையைச் சமுதாயத்தின் அரிய இன்றியமையாத நிலையான தருமத்தின் சிறப்பை விளக்குகிறார்.

## பொருளாதாரம் என்றால் என்ன?

பசி, பிணி, அச்சம் ஆகியவை ஒழிந்த சமுதாயத்தை வள்ளுவர் விரும்பினார். பேராசிரியர் கால்பிரேய்த் கூறிய வளமார்ந்த நலம் நிறைந்த சமுதாயத்திற்கிணையாக அவர் கண்ட சமுதாயத்தைக் கூறலாம்.

வறுமையும் இரத்தலும் ஒரு சமுதாயத்தின் இழிந்த நிலையைக்

காட்டுவன; பல்லெல்லாம் பரக்கக் காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டி, சொல்லெல்லாம் தெரியச் சொல்லித் துணைக்கரம் விரித்து நீட்டி ஈயென ஒருவனிடம் சென்று இரத்தலை வள்ளுவனார் பெரிதும் வெறுக்கிறார். "இரந்தே வாழ வேண்டும் எனச் சிலரை இறைவன் படைத்திருந்தானாயின் அவ்வாறு படைத்தவன் பல இடத்தில் இரந்து அழிந் தொழிவானாக" என்ற அளவிலே அவர் இரத்தலை வெறுத்துச் சினந்து பேசுகிறார்.

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்" என்பது இன்றைய சமுதாயத்துக்குப் பறை சாற்றி அறிவிக்க வேண்டிய தொன்றாகும்.

நாட்டின் நலத்திற்குச்சேமிப்பு மிகவும் இன்றியமையாதது. வறியாரை இகழ்தலும் செல்வரை வாழ்த்தலும் உலகின் இயற்கை.

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு" என்பது சேமித்தலுக்கு வள்ளுவர் காட்டும் சிறப்பை விளக்குவதாகும். செல்வமுடையான் செயலில் இறங்குதல் குன்றின் மீது நின்று யானைப்போர் கண்டதற்கு நிகராகும். செல்வமும் சேமித்தலும் இன்றியமையாதனவாயினும் அவற்றை ஆக்கும் வழிகள் அறவழிகளாய்நேர்மைவாய்ந்தனவாய் இருத்தல் வேண்டும் கண்ணீரைப் பிறர்சிந்தக்கொடு வழிகளில்திரட்டிய செல்வம் கண்ணீரைச் சிந்த வைத்துத் தேடியோரை விட்டு அகன்றுவிடும். 'அழக் கொண்ட எல்லாம் அழப்போம்' என்பது அருமையான பொருளாதாரக் கருத்தாகும். நாட்டின் செல்வம் எனப்படுவது மக்களின் உழைப்பேயாகும். வெள்ளத்தின் அளவிற்கேற்ப மலரின் நீட்டம் அமைகிறது. மக்களின் உழைப்பிற்கேற்ப நாட்டின் செல்வ நிலையும் அமைகிறது. செல்வம் எனப்படுவது, ஊக்கமேயாகும்.'உடைமையெனப்படுவது மக்களின் ஆக்கம்; அஃதிலார் 'உடையரோமற்று' என்பது ஊக்கமே மக்களின் ஆக்கம்; நாட்டின் வாழ்வு என்பதை எடுத்துக்காட்டுகிறது.

அரசியல் பேரறிஞராகிய வள்ளுவர் அரசாங்கம் விதிக்கும் வரிகள் பற்றி அழகியகருத்துக்களைக் கூறுகிறார். மக்கள் மனம் நோக வறுமையால் வருந்தும் நிலையில் வற்புறுத்தி வரி வாங்குதல் பகற்கொள்ளைக்கு நிகர்; வழிப்பறிக்கு ஒப்பு எனக் குறிப்பிடுகிறார். பாலை நிலத்திலே செல்வோரை வேல் காட்டி அச்சுறுத்திப் பொருள் பறிக்கும் கொலையாளியும், கொடுங்கோலால் மக்களிடம் வரி கொள்ளும் அரசனும் நிகர் எனச் சொல்லுகிறார். ஒரு நாட்டின் "வரவு செலவுத் திட்டம்" ('பட்ஜெட்') முடிந்தால் உபரியாக இருத்தல் வேண்டும்; இல்லையேல் சம நிலையாகவேனும் இருக்கவேண்டும். பற்றுக்குறைக்

திட்டத்தை எந்நாளிலும் வகுத்தல் கூடாது. இது ஓர் நாட்டிற்கு மட்டுமன்று; தனிப்பட்டவர்க்கும் ஏற்றதாகும். வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்யும் அரசன் வாழ்வு புறத்தே பொலிவுடையதாகத் தோற்றலாம். ஆயின், அவன் அழிவுப் பாதையிலேயே செல்கிறான். நாட்டின் செல்வத்திற்கு செல்வ முன்னேற்றத்திற்கு வறுமை, இரத்தல், மடி, இவறுதல் எனும் பதுக்குதல் ஆகியவை கொடிய நோய்களாகும். உலையா ஊக்கம், ஓயாத உழைப்பு, அளவுடைய சேமிப்பு இவை செல்வத்தை வளர்க்கும் சிறந்த சாதனங்களாகும்.

## வள்ளுவரா காப்பியடித்தார் ?

வள்ளுவரின் பொருளாதாரக் கருத்துக்கள் சில கௌடில்யரின் நூலிலிருந்து எடுக்கப்பட்டன என ஒரு சாரார் கூறுவர். ஆனால், இருவரது பொருளாதாரத் தத்துவங்களும் கௌடில்யரின் தத்துவங்களும் அடிப்படையில் பெரிதும் மாறுபட்டன என்பதைக் காய்தல் உவத்தில் அகற்றி ஆய்வார் உணர்வர். வள்ளுவர் வகுத்த பொருளாதாரத்துக்கும் சாணக்கியர் வகுத்த பொருளாதாரத்துக்கும் பல்வகை வேறுபாடுகள் காண்கிறோம். உழுவார் உலகத்திற்கு அச்சாணி; உழவரே நாட்டின் செல்வம்; உழவே உயர் தொழில் என வள்ளுவர் கூறுகிறார். சாணக்கியரோ அத்தகைய உயர்வு உழவுக்கு எனக் கொடுக்கவில்லை. மக்களை அச்சுறுத்தியும், துன்புறுத்தியும் வரியை வாங்கலாம் என்பதாகக் கௌடில்யர் கூறினார். வள்ளுவரோ குடிகளின் உள்ளம் நோகாதவாறு வரியை வாங்கவேண்டுமென்று கூறுகிறார். இவ்வாறு எண்ணிறந்த வேறுபாடுகளை இருவரது பொருளாதாரக் கருத்துக்களில் காணலாம். சாணக்கியரும் தென்னாட்டவரே என்பதனை இராமச்சந்திர தீட்சிதர் போன்ற வரலாற்று நூற் பேராசிரியர்கள் கூறியுள்ளனர். கௌடில்யர் சந்திர குப்த மௌரியனின் சபையில் கி. மு. நான்காம் நூற்றாண்டிலிருந்தார் என்பதுபற்றிக் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. எல்லாவற்றுக்கும் மேலாகக் குறளில் கூறப்படும் பொருளாதாரம் அறத்தையே அடிப்படையாகக் கொண்டது; இதனைக் கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்திலே காண்டல் இயலாது.

பொருளாதார வல்லுநராகிய ஆடம்ஸ்மித் என்பார் நேர்மை நீதி, அறம் இவற்றையே அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தை வகுக்கிறார். மனிதனின் பெருமை, உழைப்பின் உயர்வு, தனிப்பட்டவரின் பொருளாதார சுதந்திரம், சமுதாய மக்களின் உயர் பண்பு ஆகியவை ஆடம்ஸ்மித் அவர்களால் வலியுறுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் ஆடம்ஸ்மித் காலத்துக்கு ஏறக்குறைய 1500 ஆண்டு

(24–ம் பக்கம் பார்க்க)

வங்கக் கடலில் வண்ணத் தீவுகள் :

# நிகோபார் தீவுகள்

(புலவர் சா. ம. பக்தவத்சலம்)

வங்கக் கடலின் வண்ணத் தீவுகளுள் மிக்க செல்வம் கொழிக்கும் தீவாகக் கருதப்படுவது கார் நிக்கோபார் தீவாகும். ஈண்டு வானோங்கி வளர்ந்திருக்கும் தென்னை மரங்களே அதற்குச் சான்றுபகரும். நிக்கோபார் தீவு அந்தமான் தீவிலிருந்து 143 மைல் தூரத்திலுள்ளது. இத்தீவுக் கூட்டத்தில் ஏழு பெருந் தீவுகளும் 12 சின்னஞ் சிறு தீவுகளும் உள்ளன.

நிக்கோபார் தீவிற்கும் தமிழ் நாட்டிற்கும் ஒரு காலத்தில் மிக்க தொடர்பு இருந்ததாக நாம் தமிழ் நூல்கள் வாயிலாக அறிகின்றோம். தஞ்சைக் கல்வெட்டுச் சாசனங்களில் 'நக்க வாரம்' என்பதனையே நிக்கோபார் தீவு எனக் கருதுகின்றனர். கி. பி. 1292-ல் இத்தீவிற்குவந்த மார்க்கோபோலோ "நெக்குவரம்" என்று குறிப்பிட்டுப் போயினர். கி.பி. 1322-ல் பெஃரியர் ஓடினிக் (Frier Od nic) என்பவர் நிக்கோவரம் என்று பெயரிட்டழைத்ததாக அறிகின்றோம். அதன் பின்னர் கி. பி. 1520-ல் போர்ச்சுகீஸியர் "நிக்கோபார்" என்றே வழங்கிச் சென்றனர். இங்குள்ள மக்கள் நிக்கோபாகிஸ் என்றழைக்கப்படுகின்றனர். நிக்கோபார் தீவுகளின் மொத்தப் பரப்பு 636 சதுர மைல்கள். சிறப்பாக ஏழு பெரிய தீவுகளாவன கார்நிக்கோபார், தொசா, கயோர்டா நான்கௌரி, கச்சால், சிறிய நிக்கோபார், பெரிய நிக்கோபார் ஆகியவைகளே.

நிக்கோபாரிலுள்ள மக்கள் மிக்க உடல் வன்மை வாய்ந்தவர்கள். அவர்கள் மிக்க தூய்மையாய் இருப்பர்; எப்பொழுதும் மகிழ்ச்சி துலங்க விளங்குபவர்; அவர்கள்பால் வறுமை காண்பது அரிது; ஆண்டு உற்பத்தியாகும் தேங்காய்களே அவர்களின் வாழ்வை வளப்படுத்தும் பொருள்.

இவர்கள் சிறு சிறு குடிசைகளில் வாழ்கின்றனர். குடிசைகளனைத்தும் பூமிக்கு ஆறு அடி

---

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்கு முன்னிருந்த வள்ளுவர் வகுத்த பொருளாதாரத்திலே காணப்படுதலைச் சிந்திக்கும் போது பழமைக்குப்பழமையாயும் புதுமைகுப் புதுமையாயும் வள்ளுவனார் அமைகிறார் என எண்ணி இன்புறுகிறோம்

—நவ இந்தியா

உயரத்திலுள்ளவை. குடிசைகள் வட்டமாயிருக்கும். சாளரங்கள் இல்லை. ஒரு சிறிய ஏணியின் வாயிலாய் குடிசைக்குள் நுழைவர். அவர்களுடைய உணவு தேங்காய்.மீனும்உண்பர். அங்கு பழம், கிழங்கு ஏராளமானவை. தற்போது அரிசியை உணவாகச் சமைத்துச் சாப்பிடக் கற்றுக் கொண்டிருக்கின்றனர். வெற்றிலை போட்டுக்கொள்வது அவர்களுக்கு மிக்க விருப்பம். திருமணக் காலத்தில் வெற்றிலைதான் பெரிதும் மணக்கும். மணமகன் வெற்றிலை உண்ணானாயின் மணமகள அவனைக் கடிமணம்புரிவது அரிது. என்னே வெற்றிலையின் மகிமை.

இவர்கள் முகத்தோற்றம் சற்று எவரையும் கவர்ச்சிக்கும் தன்மையுள்ளது. சிறிய ஆடைகளை அணிந்திருந்த இவர்கள் நாகரீக ஆடைகளை அணிய விழைகின்றனர். பெண்கள் விழாக்காலத்தில் புடவைகள் உடுத்திக் கொள்கிறார்கள்.

இத்தீவில் உள்ளார் பெரிதும் விளையாட்டுக்களை விரும்புகின்றனர். படகுப்போட்டி, நாட்டியம், இசைக்கருவி முழக்குதல் முதலானவைகளில் நாட்டம். திருமண வயதிற்குவரின் விருந்து நடத்துவர். அதற்கு 'விங்கேஜ்' என்பர். பெண்ணை மணக்க விரும்புபவன் பெண் இல்லத்தைத் திருத்திக்கொடுத்தல் அவசியமாம். மேலும் மீன் பிடித்தல், வேட்டையாடுதல், படகு ஓட்டுதல் இவற்றில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். ஆயினும் ஆணும், பெண்ணும் சமமாகவே கருதப்படுகின்றனர். நிக்கோபாரில் பிரசவத்திற்கெனக்குடிசை ஒன்றைக் கடற்கரை யோரமாக அமைத்திருப்பார்கள். அதற்கு 'எல்பானம்' எனப்பெயர். நிக்கோபார்மக்களுள் எவரேனும் இறந்து விட்டால் சவத்தைப் பெட்டியிலிட்டு அத்துடன் இறந்துபட்டவர் பயன்படுத்திய அரிய பொருள்களையும் உடன் வைத்துப் புதைப்பார்.

நிக்கோபார் தீவுகளில் வாழும் பழங்குடி மக்கள் மலேயா அல்லது மஸ்கோலாய் மக்களின் தோற்றமும் பழக்கவழக்கங்களும் உடையவர்களாயிருக் கின்றனர். அவர்கள் அந்நிய நாட்டாருடன் மிக்க தொடர்புகொண்டிருந்தார்கள். மேலும் அவர்களோடு நன்றாய்ப் பழகிவந்தனர். ஏனெனில் அவர்கள் தங்கள் நலனைக் கருதி வாழாது பிறரோடு உறவுகொண்டிருந்தனர். ஆங்கிலேய அரசாட்சியின்போது இவர்கள் பர்மா நாட்டுடன் மிக்க தொடர்பு கொண்டிருந்தனர். மக்கள் தொகை கணக்கெடுத்தபோது 14,563-ல் 10,555 (1961) பர்மியர்களாக இருந்தார்கள். அத்துணைப்பேரும் கிறிஸ்தவ சமயப் பற்றுடையவர். ஆகவே நிக்கோபார் தீவுகளில் வாழும் பழங்குடி மக்கள் ஆதியில் பர்மாவிலிருந்து வந்திருக்கக் கூடும் எனக் கருதுகின்றனர். பதினோராம் நூற்றாண்டில் இரா[illegible] ராசேந்திர

சோழன் நிக்கோபார் மீது படையெடுத்ததாகக் கூறப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின் போது இத் தீவுகள் ஜப்பானியர் வசம் இருந்தது. பின்னர் 1945-ல் ஆங்கிலேயர் வசமானது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தலைவன் உண்டு. அவனே கிராமத் தலைவன் என்பர். அவனே எல்லோரையும் ஆண்டுவருபவன். சச்சரவு ஏற்படின் அவன் பஞ்சாயத்துத்துணைகொண்டுதீர்ப்பான். தண்டனை பகர்வுகளைத் தண்டமாகத் தரவேண்டும். திருட்டுக் குற்றத்திற்குக் கசையடி உண்டு.

நிக்கோபாரில் எங்குக் காணினும் தென்னை மரங்கள் வானோங்கி வளர்ந்திருக்கும். நிக்கோபாரைத் தென்னஞ்சோலை எனக் கூறின் மிகையாகாது. காய்கள் குலைகுலையாக காய்த்துத்தொங்குவதைக் காணின் கண்கொள்ளாக் காட்சியாகும். அங்கு மக்கள் இயற்றும்தொழில்தென்னை,மீன், பன்றி முதலியவற்றை வளர்த்தல். விவசாயமும் சிறிது உண்டு. இங்குப்பெரும்பாலும்கிறிஸ்தவர்களே வாழ்கின்றனர். கிறிஸ்தவ ஆலயங்கள் பல இருக்கின்றன. கிறிஸ்தவசமயாசாரியர்கள் இருக்கின்றனர். Rev. Bishop ஜான் ரிச்சர்டசன் அத்யக்ஷர்என்பவர் நிக்கோபார் கிறிஸ்தவ மக்களின் மாபெரும் தலைவராய் அமைந்துள்ளார். அவரேபாராளுமன்றத்தின் அங்கத்தினர். கடந்த யுத்த காலத்தில் ஜப்பானியர்களால் பெரும்பாடு அனுபவித்தவர். மறை திரு. தங்கராஜ் என்பவர் அந்தமானில் கிறிஸ்தவ சமயத் தொண்டராகப் பணியாற்றுகிறார்.

கௌரா என்ற தீவு 10 மைல் தூரத்திலுள்ளது. இங்கு களிமண் ஏராளமாகக் கிடைக்கிறது. அதனால் மண்பாண்டங்கள் ஏராளமாகச் செய்கின்றனர். மற்றத் தீவுகளில் வாழும் மக்கள் இயற்றும் மண்பாண்டங்களில் பன்றிக் கறி சமைத்து உண்ணின் பெருந் தீங்கு விளையும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். திரேசா என்ற தீவிலும் களிமண் கிடைக்கிறது. அவர்களும் அப்படிச் செய்வதால் தீட்டு ஏற்படும் என்பர். திரேசா எனும் தீவு அடுக்கடுக்கான மலைத் தொடரைப் பெற்றுள்ளது. அங்குள்ளமலைகளின் உயரம்897 அடி. கேமோர்டா, இது 700 அடி உயரத்திலுள்ளது. நன்கௌரி திரேசாவுக்கும் கேமோர்டாவுக்கு மிடையிலுள்ளது. மத்தியப்பகுதியாகிய நன்கௌரி கேமோர்டாவிலுள்ள நிலங்களில் தனிப்பட்டவர்கள் பயிரிடலாம். கூட்டுறவு வாழ்க்கை மிக்க சிறந்த முறையில் இங்கு நடைபெற்று வருகிறது.

நிக்கோபார் மக்களின் எதிர்கால வாழ்வு மிகச் சிறப்பாக இருக்கும். ஏனெனில் இந்திய அரசாங்கம் இம் மக்களுடைய முன்னேற்றத்திற்காகப் பற்பல திட்டங்களை வகுத்திருக்கின்றது. இத் தீவில் 15 பள்ளிகள் இருக்கின்றன. இங்கு நிக்கோபாரின்

மொழியே கற்பிக்கப்படுகிறது. இந்தியும் உண்டு. மருத்துவ மனைகள் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் பல இருக்கின்றன. இங்கு தேங்காய், பாக்கு முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள்.

நிக்கோபாரில் கார் நிக்கோபார்தான். சமமான பூமி: அங்கு விமானப்படைத் தளம் ஒன்றிருக்கிறது. போக்குவரத்திற்குப் பஸ் ஓடுகிறது. ஆகவே நாளடைவில் நிக்கோபார் ஆதிக்குடிகள் மிக்க நாகரிகமுள்ளவர்களாக மாறிவிடுவார்கள் என்பதற்கு ஐயமில்லை. நிக்கோபார்க்கும் அந்தமானுக்கும் தலைமை ஆட்சிநிலையம் போர்ட் பிளேர் ஆகும். இங்கு எவரும் அரசாங்க அனுமதியின்றிப் போக இயலாது.

பெரிய நிக்கோபாரில் காடுகளின் மத்தியில் சோம்பன்கள் வசிக்கிறார்கள். இவர்களுள் இரு பிரிவினர்கள் உண்டு. ஒரு பிரிவினர் வெளி உலகத் தொடர்பை விரும்பாமல் பகை உணர்ச்சியுடன் இருப்பவர்கள். மற்ற பிரிவினர் வெளி உலகத் தொடர்பைப்பெரிதும்விரும்புகிறவர்கள். இவர்கள் கரையோரமாக வசித்து வருகின்றனர். இவர்கள் தேன் பிரம்பு முதலியவற்றைக்கொடுத்து நிக்கோபாரியரிடமிருந்து துணி, புகையிலை, கத்திகள் பெறுகின்றனர். மரங்களைக் குடைந்து நெருப்பு உண்டாக்குவர். தோட்டங்களில் பெரும்பாலும் வாழை மரங்களும் கிழங்குகளும் பயிரிடப்படுகின்றன. இவர்கள் வெற்றிலை போடுவது வழக்கம். எவரேனும் இறந்துவிட்டால் உடனே தாங்கள்வாழ்ந்துவந்தகுடிசையை விட்டு வேறு குடிசைக்குச் செல்வர்.

இனி நிக்கோபார் மக்களின் சமூக கலாச்சார பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழி வகுக்கும் பல திட்டங்களை இந்திய அரசாங்கத்தார் செயல்படுத்துவரேல் இத் தீவுகள் அனைத்தும் செல்வம் கொழிக்கும் தீவுகளாகத் திகழும் என்பதற்கு ஐயமில்லை.

—'நவ இந்தியா''

---

## அறிவுக்கதிர்

அயல்மொழிப் பயிற்சியினை எவ்வளவுதான் இங்கே பரவ வைத்தாலும் அதன் உதவிகொண்டு நம் தமிழ் மக்களைச் சிறிதும் முன்னேற்றல் இயலாது. தமிழ் மக்களை முன்னேற்றுதல், தமிழ் ஒன்றினாலேயே கைகூடும்.

—மறைமலையடிகள்

ஒவ்வொரு மனிதனும், மற்ற மனிதர்களின் கண்களுக்கு, அற்புதமான ஓர் இரகசியமாகவும், ஆழம் காணமுடியாத ஓர் அதிசயமாகவும் காணப்படுகிறான். இதுதான் மனித வாழ்வுபற்றிய மிகப் பெரிய ஆச்சரியம்.

—சார்லஸ் டிக்கன்ஸ்

# தாமஸ் எடிசன்

மின் விசை விளக்கைக் கண்டு பிடித்த மாதஸ் ஆல்வா எடிசன் இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கு வழி வகுத்த வித்தகர்களில் ஒருவர்.

அமெரிக்காவில் மிலான் என்னும் இடத்தில் 1847 பிப்ரவரி மாதம் பிறந்தவர் எடிசன். பெற்ேறார் பொருள் வசதி உள்ளவர்களே விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல், பன்னிரண்டு வயது நிரம்பு முன்னே எடிசன் வீட்டில் இரசாயனச் சோதனைகள் செய்யலானார். அதற்குப் பணம் தேவைப்பட்டது. அதைப் பெற்ேறாரைக் கேட்டுவாங்க மனம் இன்றி, அவர் கிராண்டு டிரங்கு ரயில் வேலையில் வேலை பார்க்கலானார். ஓடும் ரயிலில்தான் அவருக்கு வேலை. அங்கே ஒரு பத்திரிகை வெளியிடத் துணிந்தார் எடிசன். வயது 15 தான். ஒரு கை அச்சகம் வாங்கினார். பத்திரிகைக்கு ஆசிரியரும், பதிப்பாளரும், வெளியீட்டாளரும் அவரே. "கிராண்டு டிரங்கு ஹெரால்டு" என்ற அப்பத்திரிகை முழுவதும் ஓடும் ரயிலிலேயே உருவாகி வெளியாயிற்று!

ஒருநாள் ஒரு விபத்து. ரயில் நிலைய அதிகாரி மகன், பிழைத்தது மறு பிழைப்பு. உதவியவர் எடிசன் தான். இதற்காக, எடிசனுக்கு அதிகாரி தந்தி அடிக்கும் வேலை கற்றுக் கொடுத்தார். ஆனால் ஒரே வேலையில் படிந்து இருப்பது எடிசன் இயல்பில் இல்லை. எப்போதும் விஞ்ஞானச் சோதனைகள். எனவே இவருக்கு வேலை நிலைத்ததில்லை. பதினைமூாவது வயதில் மறு தந்திக்கருவி ஒன்றைக் கண்டுபிடித்தார். அதன் பின் அவர் வாழ்க்கையில் இரண்டாயிரம் கருவிகளுக்கு மேல் கண்டு பிடித்திருக்கிறார்

அடுத்தபடி, மத்திய சட்ட சபையில் பயன்படும் என்று மின் விசை வாக்குக் கணிப்புக் கருவி ஒன்றை எடிசன் உருவாக்கினார். நன்கு வேலை செய்தது கருவி. வேண்டாம் என்று தள்ளி விட்டனர் சட்டசபையினர். "தம்பி, சட்ட சபையிலுள்ளவர்கள் தாங்கள் வாக்களிப்பதெல்லாம் பதிவாக வேண்டும் என்று விரும்பமாட்டார்கள்" என்று உறுப்பினர் ஒருவர் சொன்ன விளக்கம், எடிசனுக்கு ஒரு பாடம் படிப்பித்தது. தேவைப்படுமா என்பதை முதலில் திண்ணமாக அறிந்து கொள், அதன் பின் செய்.

அதன்பின், அவர் நியூயார்க் நகரின் பங்கு மார்க்கெட்டுக்கு ஒரு கருவியைக் கண்டுபிடித்துக் கொடுத்து 40,000 டாலர் பெற்றார். இதைக்கொண்டு மென்லோ

பார்க் என்னும் இடத்தில் அவர் பெரிய மின் விசை ஆய்வுக்கூடம் ஒன்றை அமைத்தார். புதுப் புதுக் கருவிகள் கண்டு பிடிக்கும் "புதுமைக் கூடம்" என்று அதற்குப் பெயர் வைத்தார். இன்று ஒரு தேசியச் சிறப்புச் சின்னமாக விளங்கும் இந்த இடத்தில்தான் அவர் அறுபது ஆண்டுகளாக அளவிறந்த விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டு பிடித்துத் தமது நாட்டில் மட்டு மன்றி உலகமெங்கும் மக்கள் வாழ்க்கையில் பல மாறுதல்களை நிகழ்த்தினார்.

இங்கு எங்கும் எளிதில் காணும் எண்ணிறந்த கருவிகளை இயற்றியவர் எடிசன்; எனினும், கிராமபோன், மின் விளக்கு, திரைப்படம் எடுக்கும் கருவி இவை மூன்றுமே எடிசன் பெயரை மக்கள் மனத்தில் நிலையாகப் பதித்துள்ளன.

## பேசும் கருவி

தந்தியில் வரும் குறியீடுகளை மறு பதிப்புச் செய்யும் கருவி ஒன்றைப்பற்றி அவர் ஆராய்ந்து கொண்டிருக்கையில் தோன்றிய தாகும் கிராமபோன். கையால் சுழற்றக்கூடியதும் தகரத் தகடு பொதிந்ததுமான ஓர் உருளையைச் சுழற்றி ஓர் ஊசி முனை கொண்டு அதில் அவர் தந்திக் குறியீடுகளைப் பதிய வைத்தார். அதை அவர் ஒரு நாள் மிகவேகமாகச் சுழற்றியபோது, ஊசி அதிர்விலிருந்து ஓசை ஒன்று கேட்டது. அதிர்வதற்கு டெலிபோன் கருவியிலுள்ள "இடைத்திரை" போன்று மெல்லிய வட்ட வடிவமான தகடு ஒன்றைப் பயன்படுத்தினால், இவ்வாறு உருவாகும் ஒலியைக் கேட்க வைக்கலாம் என்று அவர் எண்ணினார்.

அதே போல் ஒரு எளிய கருவியை அமைத்தார். ஒலியைப் பெருக்கிக் காட்ட அதில் ஒலிக் குழாய் ஒன்றும் இருந்தது. எடிசன் கையால் உருளையைச் சுழற்றிக் கொண்டு, ஒலிக் குழாயினுள் சிறுவர் பாட்டு ஒன்றின் முதலடியை உரக்கச் சொன்னார். பின்னர், பதிவான வரையில் ஓர் ஊசியை முனை படும்படி வைத்து உருளையைச் சுழற்றினார். உதவியாளர்கள் வியக்கும் வண்ணம், அதே வார்த்தைகள் திரும்பக் கேட்டன. கிராமபோன் தோன்றி விட்டது. இது எடிசனுக்கு நாடெங்கும் பெரும் பெயரும் பொருளும் ஈட்டித் தந்தது. இப் பணமே அவர் மின் விளக்கு கண்டு பிடிக்க உதவிற்று.

கரிக்குச்சி, உலோகக் கம்பிகள் வழியாக ஆற்றல் வாய்ந்த மின் விசையைச் செலுத்தினால், அவை ஒளி விடும் என்பதை அறிந்த எடிசன் மின் விளக்குச் சரியான இழையாகக் கூடிய பொருள் என்ன என்று ஆராயலானார். பல்லாயிரக்கணக்கான விதம் விதமான பொருள்களை யெல்லாம் ஆராய்ந்து கடைசியில் கரியாக்கப்பட்ட பருத்தி நூல் இழையைத் தெரிந்தெடுத்தார். அது

அமைந்த மின் விளக்கு 40 மணி நேரம் எரிந்தது. 1879 அக்டோபர் 21ம் தேதி. அதுதான் எரிந்து ஒளிவிடும் மின் விளக்கின் பிறந்த நாள்.

மின் விளக்கு காணும் காலத்திலேயே எடிசன் வேறு பல ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டிருந்தார். காற்றுப் புகாத வெற்றிடத்தில் கனி வகைகளைக் கெடாமல் வைக்கும் முறை ஒன்றை அவர் சிறப்பாகக் கண்டுபிடித்தார். அன்று அவர் தமது குறிப்புப் புத்தகத்தில் வரைந்திருக்கும் ஒரு படம் இன்று நாம் ஹெலிக்காப்டர் விமானம் என்று கூறுவதாக உள்ளது. (1882) ஒரே ஆண்டில் அவர் 141 விஞ்ஞானப் புதுமைகளைத் தோற்றுவித்து உரிமைப் பதிவு வேண்டினார்; அவற்றில் 75 உரிமைப் பதிவு பெற்றன. எடிசன் "மென்லோ பார்க்சித்தன்" எனப் பெயர் பெற்றதில் வியப்பில்லை. எனினும் அவர் எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். அழகாக உடுத்தியிருக்க மாட்டார். கைகளில் இரசாயனப் பொருட்களின் கறை அழியாமல் இருக்கும். அடிக்கடி உணவு மறந்து போகும். சில சமயம் ஆயனக் கூடத்தில் மூன்று, நான்கு நாள் தொடர்ந்து இருந்து விடுவார். களைப்பு வந்தால், கால் மணி நேரம் கண்ணயர்வார். நாள் ஒன்றுக்கு 20 மணி நேரமும் வேலை செய்வார். இரவா, பகலா என்பதே தெரியாது அவருக்கு. "நான் எடுத்த காரியங்களை முடிப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா? நான் வேலை செய்கிற இடத்திலே கடிகாரமே கிடையாது; அதுதான்" என்று அவர் சொல்வது வழக்கம்.

1887-ல் நண்பர் ஒருவர் விநோதமான அன்பளிப்பு ஒன்று கொடுத்தார். "வாழ்க்கைச் சக்கரம்" என்று பெயர் சூட்டப்பட்ட ஒரு விளையாட்டுச் சாமான் அது. அதன் சக்கரத்தைச் சுழற்றி, துளை வழியாக உள்ளே பார்த்தால், ஒன்றன் பின் ஒன்றாகப் பல படங்கள் கண்முன் தோன்றும். கரடி ஒன்று வித்தைகள் செய்வதை இக் காட்சியில் கண்டு களித்தார் எடிசன். உடனே சிந்திக்கலானார். வரிசையாகப் பல சிறிய புகைப் படங்களை வைத்து மிக வேகமாகக் கண்முன் வரச்செய்தால், செயல்களை நேரில் பார்ப்பது போன்ற உணர்ச்சி ஏற்படாதா என்று எண்ணினார். அதுதான் திரைப் படம் பிடிக்கும் புகைப்படக் கருவி தோன்றக் காரணம்.

அவருக்குக் கிடைத்த பதக்கங்கள் பலப்பல. அவற்றை "எண்ண முடியாது. அளக்கத்தான் வேண்டும்" என்று சிரித்துக் கொண்டே சொல்வார் அவர். 1929 அக்டோபர் மாதம் அவர் மின் விளக்கு கண்டு ஐம்பதாண்டு நிறைவு. அமெரிக்கா அதற்குப் "பொன் விழா" எடுத்தது. நகரங்கள் ஒளி அணி பூண்டன. தபால் இலாகா தனித் தபால் தலை வெளியிட்டது. வெளி நாட்டிலிருந்து ஐன்ஸ்டீன்

பாராட்டிப் பேசினார். பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி இவை யெல்லாம் பெரும் சிறப்புச் செய்தன. அதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பு அமெரிக்க மத்திய சட்டசபை தங்கப் பதக்கம் வழங்கியது. எடிசன் பழுத்த பழமாக 84—வது வயதில் காலமானார்.

(தனி அரசு)

# தமிழ் நாட்டு அரசினர் வெளியீடு

---

## தமிழ்ப் பாடநூல் – இரண்டாம் வகுப்பு

ஐயா,

குறை கூறவேண்டுமென்பதற்காகக் கூறுவதன்று. எவரும் கண்டவளவில் வியக்கக்கூடியதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கக்கூடியதுமான—அச்சிறு எழுத்துக்களாலான பாடங்களைக் கொண்ட-இவ்விரண்டாம் பாட நூலைப் பார்த்த பின்னரே வருத்தத்துடன் எழுதலானேன். மூன்றும் பாடம்தான் படிக்கக்கூடிய முதல் பாடம். எவ்வளவு நீண்ட பாடம்! எவ்வகை எழுத்துக்கள்! எடுத்ததுமே கதைப்பாடமா? முதல்தரமான தலைமாணாக்கர்கூடப் படிக்க எவ்வளவு சிரமம்! தமிழ் படிக்க இனிக்குமா? இவை சிந்திக்க வேண்டியவை அல்லவா? முன் வழக்கப்படி இரண்டாம் வகுப்புத் துவக்கத்தில் சில வாக்கியங்கள் கொண்ட பாடங்களே தாண் காணப்படும்; அதுவும் பெரிய எழுத்துக்களுடன்தான். எந்த மாற்றமும் ஏமாற்றமாய் முடியலாகாது. தமிழ்க் கல்வி பயம் காட்டுவதாகச் சிறுவர்களுக்குத் தோன்றக்கூடாது. வயதுக்கேற்ற முறையும், பருவத்திற்கேற்ற பாடமும் அமைப்பதே உளநூல் வல்லுநர் கருத்தாகும். மேலும், உதாரணத்திற்கு, ஏழாம் பாடத்தைப் படித்துப் பாருங்கள். ஆறு வயதுள்ள மாணவ மாணவிகள் கற்க முடிகிறதா என்பதை ஆராயுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பக்கல்வி அழுகை தரும் கல்வியாக இருக்கக்கூடாது. ஆதலால், அடுத்து வெளிவரும் பதிப்புகளில் கட்டாயம் எழுத்துக்களைப் பெரியனவாக்கி அச்சிட ஆவன செய்வார்கள் என்று அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Madukkarai
11–7–'63

V. R. Subramanian,
Headmaster,
A.C.C. Factory Ele School.

—(பாலர் கல்வி)

# அமெரிக்காவில் கல்வித் துறையில் பெரும் அக்கறை

---

## நான் கண்டவைகள்பற்றி மந்திரி பக்தவத்சலம்

நிதி மந்திரி திரு. எம் பக்தவத்சலம் தமது அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு 28–6–63 காலை சென்னை வந்து சேர்ந்தார்.

அன்று பிற்பகல் விமானம் மூலம் மதுரை புறப்படு முன் கோட்டையில் அவர் பத்திரிகை நிருபர்களுடன் தமது அமெரிக்க அனுபவம் பற்றி எடுத்துரைத்தார்.

உலக உணவு மாநாடு பெரிதும் பயனுள்ளதாக இருந்தது. உணவுத்தேவை விஷயத்தில் தன்னிறைவு அடைந்த அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளும் உலகில் உணவு உற்பத்தியை அதிகரித்து உணவுப் பஞ்சம் என்பதையே உலகில் இல்லாத ஒன்றாக்க வேண்டுமென்பதில் அக்கறை காட்டிப் பேசினார்கள். ஆப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் விவாதங்களில் தீவிரப் பங்கு கொண்டனர். விவசாயத்துறை விஞ்ஞானிகள் பலரும் அரும் யோசனைகள் பலவற்றைக் கூறி ஒத்துழைத்தனர்.

### ராஷ்டிரபதி உரை

இந்த உலக மாநாட்டில் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆற்றிய சொற்பொழிவு எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியது. காரணம் அங்கு பேசிய அமெரிக்க அதிபர் கென்னடியும் மற்றோரும் குறிப்பை வைத்துக்கொண்டே பேசினார்கள். ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பு ஏதுமில்லாமல் சரளமாகச் சொற்பொழிவாற்றினார்

உணவு மாநாட்டுக்குப் பிறகு முதலில் நான் பலவகை மோட்டார் வாகன உற்பத்தி நடைபெறும் டெட்ராயிட் தொழில் நகருக்குப் போனேன். அங்கே போர்டு கார் தொழிற்சாலையைப் பார்த்தேன். உலகிலேயே சொந்த உருக்காலை வைத்துள்ள கார் தொழிற்சாலை இது ஒன்றுதான். உருக்குத் தகடொன்று பல விதங்களில் உரு மாறி முடிவில் ஷோரூமில் வைக்கப்படும் கார் ஆகி வெளிவருவதை அங்குக் கண்டேன். 54 வினாடிகளுக்கு ஒரு கார் வீதம் நாள் ஒன்றுக்கு 1064 கார்கள் இங்கு உற்பத்தியாகின்றன. அங்கு, உற்பத்தியாகும் கார்களில் பெரும்பாலும் அமெரிக்காவிலேயே வாங்கப்பட்டு விடுவதாக அவர்கள் கூறினார்கள். அங்கு தொழிலாளர்கள் வாரத்திற்கு 5 நாட்கள் வேலை செய்கிறார்கள். அங்கு வேலைசெய்யும் 38 ஆயிரம் தொழிலாளர்களில் 22 ஆயிரம் தொழிலாளர்களுக்கு சொந்தக்கார் இருக்கின்றது. இதற்கு மற்

றொரு காரணம் எளிதில் தவணை முறை கடனில் கார்கள் கிடைப்பதாகும். ''நம்பு-நம்பப்படுவாய்'' —என்ற சித்தாந்தம் அங்கு உணரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள இந்திய தூதராலய சிப்பந்திகள் அனைவரும் சொந்தக் கார் வைத்திருக்கிறார்கள். தவணை முறையில் எளிதில் கார்களை வாங்க முடிவது பெரும் உதவியாக உள்ளது. பெட்ரோலும் அங்கு விலை மலிவு என்று நிதி மந்திரி கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:— சிகாகோ நகரில் கல்வி போர்டு அலுவலகத்தைப் பார்த்தேன். அந்தப் பெரிய நகரைப்பலமாவட்டங்களாகப்பிரித்திருக்கிறார்கள். கல்வி போர்டு அலுவலகம் மிகப் பெரியது. ஏராளமான பேர் பணியாற்றுகிறார்கள். பாடப் புத்தகங்களை நன்கு ஆராய்ந்து நுணுகிப் படித்துப் பார்த்த பின்னரே தேர்ந்தெடுக்கிறார்கள். மேலும் கோடை விடுமுறையின் போது, பள்ளி ஆசிரியர்களின் முகாம்கள் நடத்திப் பாடப் புத்தகங்கள் பற்றி அவர்களது யோசனைகளும் கேட்டு அறியப்படுகின்றது. இது சிறந்த முறையாக உள்ளது என்று திரு. எம். பக்தவச்சலம் கூறினார். பள்ளிக் கட்டிடங்கள் கட்ட ஸ்தலஸ்தாபனங்களே கடன் பத்திரங்கள் விற்றுப் பணம் திரட்டுவதாகவும் அவர் கூறினார்.

பள்ளிகளில் பகலுணவுத் திட்டம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. எல்லாக் குழந்தைகளும் காசு கொடுத்தே தங்களுக்குத் தேவையான அளவு உணவை வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அதற்கு வகையில்லாத சில ஏழைக் குழந்தைகளும் இருக்கிறார்கள். ஆனால் அம்மாதிரி உள்ள குழந்தைகளுக்கு ஆசிரியர்கள் பள்ளி நிதியிலிருந்து தினந்தோறும் ரகசியமாகக் கொடுத்து விடுவார்கள். இதனால் பள்ளியின் உணவு விடுதிக்குச் செல்லும்போது ஏழை என்கிற வேற்றுமை தெரியாமல், மற்றவர்களோடு சேர்ந்து உணவு வாங்கி உண்ண முடிகிறது.

ஏழைக்குழந்தைகளின் கௌரவமும் காக்கப்படுகின்றது.

காலிபோர்னியோ, சான்பிரான்சிஸ்கோ ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கும் விஜயம் செய்தேன். அங்கு இந்திய வரலாற்றை விசேஷமாகப் பயிலும் சில பேராசிரியர்களைச் சந்தித்தேன். இந்திய விவகாரங்களில் அவர்கள் அதிக அக்கறை காட்டி வருவதறிந்தேன்.

அபிஸ்மகமது இப்ராகிம் தோல்வி, மஸானி வெற்றி, தங்கக் கட்டுப்பாடு விதிகள், மொழிப் பிரச்னை, தி.மு.க பற்றி எல்லாம் அவர்கள் கேட்டார்கள்.

அங்குள்ள நூலகத்தின் பொதுப்பிரிவில் சென்னையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளான இந்து, சுதேசமித்திரன், ஆந்திர பத்திரிகா போன்றவற்றின் 1920-ம் வருடத்து ஏடுகளெல்லாம்

பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதைப் பார்த்துப் பெரிதும் வியப்படைந்தேன் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவிலிருந்து தாய் நாடு திரும்புகையில் அமைச்சர் திரு பக்தவச்சலம் ஜப்பான், ஹாங்காங், சயாம் வழியாக வந்தார்.

உலகிலேயே குள்ளமானவர்கள் என்று கூறப்பட்ட ஜப்பானியர்கள் உயரமாகவும் மெலிந்தும் வளரக் கையாளும் சில முறைகள் பற்றியும் அவர் பிரஸ்தாபித்தார்.

ஜப்பானியர்கள் தங்களது உணவுப் பழக்கத்தில் மாறுதலைச் செய்துள்ளனர். மூன்று வேளையும் அரிசி உணவை உண்பதற்குப்பதிலாக ஓரளவு கோதுமையைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அத்துடன் பாலை அதிகம் உட்கொள்ளுகிறார்கள். இது அவர்களை உயரமாக வளரச் செய்கிறது என்று திரு. பக்தவத்சலம் கூறினார்.

# ஆசிரியர்கள்மீது கல்வியமைச்சர் பாய்ச்சல்!

## பழிவாங்குவதற்குக் காரணம் கற்பிக்கிறார்!

"ஆசிரியர்கள் பலர் தி.மு.க.—வுக்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று புகார் வந்துள்ளது; அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மந்திரி பக்தவத்சலம் எச்சரித்தார்.

நிலக்கோட்டையில் நடந்த ஆசிரியர்கள் மாநாட்டில் அவர் பேசியதாவது :—

"ஆசிரியர்களிடையே ஒரு தவறான அரசியல் உணர்வு தலையெடுக்கத் தொடங்கியுள்ளது. அவர்கள் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் அரசியலில் ஈடுபடுகிறார்கள். பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்கள். பல ஆசிரியர்கள் தி. மு. க. -வுக்கு ஆதரவாக வேலை செய்வதாக என்னிடம் புகார் வந்துள்ளன.

"இனியும் இப்படிப்பட்ட நிலையை அனுமதிக்கமுடியாது. ஆசிரியர்கள் அரசியலில் தலையிடுவது விரும்பத்தக்கதல்ல. இதை இனியும் பொறுக்கமுடியாது. அரசியலில் ஆர்வமிருந்தால் அவர்கள் வேலைகளை விட்டுவிடட்டும். விலகிச்சென்று அரசியல் செய்யட்டும். அரசாங்கத்தின் சம்பளத்தை வாங்கிக்கொண்டு அரசியலில் தலையிடுவதை அனுமதிக்க முடியுமா? அப்படிப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கிறேன்."

—'தினச்செய்தி' 24-7-63

ஒரு ஜனநாயக சமுதாயத்தின் அரசியலில் ஓட்டுச் சீட்டுக்குத்தான் மதிப்பு உண்டே தவிர துப்பாக்கியின் வேட்டுக்குக் கிடையாது. இந்த உண்மையை மறுப்பவர்களை மக்கள் வாளாவிட்டு வைத்ததும் கிடையாது. —ஆப்ரகாம் லிங்கன்

# தற்போதைய கல்வி முறையில் உள்ள பெரும் குறைபாடுகள்

## ஸ்ரீனிவாசவரதன் எடுத்துக் காட்டுகிறார்

### ஆசிரியர்கள் தைரியமாக எதிர்த்துக் கருத்துக்களை வெளியிட அழைப்பு

*சென்னை, ஜூலை. 25—ராஜ்யத்தில் தற்போது குறிப்பாக செகண்டரி பள்ளிகளிலுள்ள கல்வி முறையை "கல்வியற்ற கல்வி" என்று கல்வித்துறை பிரமுகர் திரு. டி. சீனிவாச வரதன் இன்று குறைகூறினார். மாணவரின் பகுத்தறிவுச் சக்தியை வளர்க்க இந்தக் கல்வி முறையில் வழியே இல்லை என்றார்.*

சட்டசபையின் செகண்டரி கல்வி ஆலோசனைக் குழுவில் ஒரு மெம்பரான திரு. சீனிவாச வரதன் ஹிந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல் ஆசிரியர்கள் சங்கத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், 700 பக்கங்களுக்கு சமூகப்பாடம் வைத்திருப்பது மிக மோசமானது என்றும், இத்தகைய முறையை ஆசிரியர்கள் தைரியமாக எதிர்த்தெழ வேண்டும் என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:- கொஞ்ச பாடங்களை வைத்து அதை நன்றாகச் சொல்லிக் கொடுக்கும்படியாகக் கல்வி முறை இருக்க வேண்டும். இப்போதுள்ளதுபோல் ஏகமாகப் பாடங்களை வைத்துச் சுமத்துவதில் பயன் இல்லை. விஞ்ஞானத்தில்கூட பள்ளிக்கூடத்தில் மிக அதிகமாகவே போதிக்கப்படுகிறது. இதனால் சொல்லிக் கொடுப்பதைக் கிரஹித்துக் கொள்ளவோ பகுத்தறியவோ முடியாமல் போய்விடுகிறது.

பௌதிகத்தில் பரிமாணத்தை அறிய 20 வித முறைகள் சொல்லித் தரப்படுகின்றன. ஒரு முறையே போதும். இதேமாதிரி சரித்திரத்திலும் வேத காலத்திலிருந்து போதிக்கப்படுகின்றது. இதன் விளைவாக கடந்த 40, 50 ஆண்டுகளில் நடந்தவைகளைப் பற்றிச் சிந்திக்க முடியாமல் போய்விடுகிறது. இப்படிப்பட்ட அறிவினால் என்ன பிரயோசனம்?

பிரிட்டனில் இறுதித் தேர்வுக்கு 150 பக்கங்கள்தான் வாசிக்கிறார்கள். அந்தப் பாடங்கள் ஏகச் சுமையாயில்லை. நம்முடையதைப்போல் அல்லாமல் விளைந்து கொடுக்கக்கூடியதாயும் அமைந்துள்ளது. இதனால் அம் மாணவர்கள் விஞ்ஞானத்தில் நவீன

அபிவிருத்திகளைக்கூட படித்துக் கொள்ள முடிகிறது.

கார்ப்பரேஷன் பள்ளிகளில் உள்ள படிப்பின் தரத்தைச் சொல்ல வேண்டியதில்லை. அது எல்லோருக்கும் தெரிந்ததே. வெளியூர்களில் இன்னும் மோசம். ராஜ்யத்தில் 1940-ல் 6000 ஆரம்பப்பள்ளிகளே இருந்தன; இப்போது 30,000 ஆகியிருக்கின்றன. கல்வி, அளவில் அதிகரித்துள்ளதேயொழிய தரத்தில் மிகக் குறைந்திருக்கிறது.

எல்லோருக்கும் செகண்டரி கல்வி அளிப்பதென்பது நல்லது தான். நாம் பிரிட்டிஷாரிடமிருந்து அவர்களுடைய கல்வி முறையைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறோமேயொழிய, தரத்தைப் பாதுகாக்க அவர்கள் செய்ததைக் கடைபிடிக்கவில்லை.

சுதந்திரத்துக்குப் பின் பள்ளிக்கூட பாடத் திட்டமும், கொள்கையும் அடிக்கடி மாற்றப் பட்டுள்ளன.

வகுப்பில் மாணவர்களை விட ஆசிரியர்தான் சுறு சுறுப்பாயிருக்கிறார். ஒவ்வொரு வகுப்பிலும் 45 முதல் 50 மாணவர்கள திணிக்கப் பட்டிருக்கும் வரை இந்த நிலைமைதான் இருந்து வரும். பிரிட்டனில் கீழ் வகுப்புகளில் வகுப்புக்கு 30 முதல் 35 பேரும், மேல் வகுப்புகளில் 25 பேரும்தான் இருக்கிறார்கள்.

இங்கு பொறுக்கும் முறை கிடையாது. சர்க்கார் பரீட்சைகளில் மார்க்குகள் அள்ளிப் போடப்படுகின்றன. இவையெல்லாமாகச் சேர்ந்து செகண்டரி கல்வியின் தரத்தைக் குறைத்து விட்டன. எண்ணிக்கையைக் கட்டுப் படுத்தாவிட்டால் தரம் குறையத்தான் செய்யும்.

செகண்டரி கல்வியின் க்ஷீண நிலை, சர்வகலா சாலையிலும், மேல் பதவி வரை காரியாலயங்களிலும் பிரதிபலிக்கிறது.

பரீட்சையில் தேறுவதைக் குறிக்கோளாகக் கொண்டே இன்று பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படுகின்றன. மாணவர்களைக் கேள்விகள் கேட்கிறார்கள்; கவாத்து செய்யச் சொல்லுகிறார்கள்; பலவித சோதனைகளுக்கு உள்ளாக்குகிறார்கள். இதெல்லாம் போதனையாகாது. ஊட்டி தயாரிப் படுத்துவதேயாகும்; இதெல்லால் என்ன வித்தை?

மாணவர்களுக்கு எதில் ருசி இருக்கிறதென்பதை நாம் கவனிப்பதில்லை. வகுப்புகளில் சில மாணவர்கள் மண்டுகளாயிருக்கக்கூடும். ஆனால், பின்னர் அவர்கள் பெரிய மேதாவிகளாகி விடக்கூடும். இத்தகைய மாணவனிடம் புதைந்து கிடக்கும் மேதையைக் கண்டு பிடித்து அவர்களுக்கு வேண்டிய ஊக்கமளிப்பதற்கான வாய்ப்பு இப்போதைய முறையில் கிடையாது.

(44-ம் பக்கம் பார்க்க)

# நீவிர் அறிவீரா?

## மூன்றாவது திட்ட இறுதிக்குள் 90 சதவிகித பெண்களுக்குக் கல்வி

திருநெல்வேலி, ஜூலை 7—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் நூற்றுக்கு நூறு இல்லாவிட்டாலும் 90 சதவிகித மாவது பெண்களைப் பள்ளிக் கூடங்களில் சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் சர்க்கார் கல்விக்கொள்கையை அனுஷ்டித்து வந்திருக்கிறது. மாதர் கல்வியில் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதே நோக்கம். ஆரம்பக்கல்வி போதனைப் பொறுப்பு முழுவதையும் மாதர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பதும் சர்க்காரின் நீண்டகால இறுதியான கொள்கை என்று தமிழகக் கல்வி நிதித் துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் நேற்று இங்குக் கூறினார்.

பாளையங்கோட்டையில் சாரா டக்கர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ரூ. 8000 செலவில் கட்டப்பட்ட புதிய ஹாஸ்டலைத் திறந்து வைத்து மேலும் திரு. பக்தவத்சலம் கூறியதாவது:—

ஆரம்பக்கல்வி போதனைப் பொறுப்பை மாதர்களிடம் ஒப்படைப்பதற்குக்காரணம உண்டு. இளம் சிறுவர் சிறுமியரைப் பக்குவமாக நடத்திக்கொண்டு போவதில் பொதுவாக ஆண்களைவிட ஆசிரியைகளுக்கு, அதிகத் திறமை உண்டு. லாயக்கானவர்கள்.

கூட்டுக் கல்வி பொருத்தமாக இராதாகையால் செகண்டரி கல்விக் கட்டத்தில் மாணவருக்காகவும், மாணவிகளுக்கென்றும் தனித்தனியாகப் பள்ளிக்கூடங்கள் தேவை. சமீபத்தில் நான் அயல் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்ததிலிருந்து மேல்நாட்டிலும் நான் சொன்ன கருத்துக்கு ஆதரவு பெருகி வருவதைக் கண்டேன்.

மாதர்களின் செகண்டரிக்கல்வியைத் துரிதப்படுத்துவதற்கு இரு காரணங்கள்; ஆரம்ப உயர்தர கிரேட் ஆசிரியர்களைத் தயாரிக்கும் திட்டத்தை நீக்கிவிட சர்க்கார் முடிவுசெய்துள்ளளர். ஆரம்பக்கல்விப் பொறுப்பை ஆசிரியைகளிடம் ஒப்படைத்து விடுவது விரும்பத்தக்கது என்பது அடுத்தபடியான காரணம்.

இப்போது ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுள் 40 சத விகிதத்தினர்தான் மாதர்கள். இதைப் படிப்படியாக அதிகமாக்கி 100க்கு 100 ஆக்கிவிடவேண்டும். இதற்கு அதிகமாக மாதர் செகண்டரி பயிற்சிப் பள்ளிகள்

ஏற்படுத்தவேண்டும். இந்த நோக்குடன்தான் இவ்வாண்டு கும்பகோணத்தில் சர்க்கார், மாதருக்காகக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க அனுமதித்தார்கள். பொதுஜன கருத்துக்கேற்ப தமிழகமெங்கும் அநேகம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளையும் திறக்க அனுமதி கொடுத்தார்கள்.

எஸ். எஸ். எல் ஸி. பரீட்சையில் ஏராளமாக மாணவர்கள் தேறாமல் விரயம் ஏற்படுவதைப்பற்றி அண்மையில் மத்தியக் கல்வி ஆலோசனை போர்டு கவலை வெளியிட்டிருக்கிறது. இதை நிவர்த்திக்க ஒரே ஒரு பரிகாரம்தான் உண்டு. சராசரியைவிட திறமைக் குறைவாக உள்ள மாணவ, மாணவியர் விஷயத்தில் ஆசிரியர்கள் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதே அந்தப் பரிகாரம். மேலே நாடுகளிலெல்லாம்கூட இப்படித்தான் செய்கிறார்கள். பெற்றோர்களுக்கும் இதில் பொறுப்பிருக்கிறது. கவனம் சிதறும்படியாகவோ ஒழுங்கு முறை குறையும்படியாகவோ இல்லாத திருப்திகரமான நிலைமை குடும்பத்தில் நிலவும்படி அவர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும்.

விழாத் துவக்கத்தில் நெல்லை பிஷப் ரைட் ரெவ. ஏ. ஜி. ஜேப்ராஜ் துதிகீதம் பாடினார். பள்ளி நிர்வாகி திருமதி ஜேசுதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

——

## நெடுநாள் கெடாத புதிய ரக வாழைப்பழம்!

சென்னை ஜூலை 11—
மேற்கிந்தியத் தீவுகளில் விளையும் கிராஸ் மிக்கேல் எனப்படும் புதுவகை வாழைப் பழத்தை இந்தியாவில் விளைவிக்கும் சோதனை தஞ்சைமாவட்டம் ஆடுதுறையில் உள்ள ஆராய்ச்சிப் பண்ணையில் நடைபெற்று வருகிறது. இவ்வகைப் பழங்களுக்கு உலகச் சந்தையில் மிகுந்த கிராக்கி இருந்து வருகிறது.

இப்பழங்கள் ஒரே சீரான அளவில் பெரிதாகவும் பளபளப்பான மஞ்சள் நிறத்திலும் நாள் பட கெடாமலும் இருக்கின்றன. மற்றப் பழங்களில் தோலில் கறுப்பு நிறம் ஏற்படுவதுபோல் இவற்றில் உண்டாவதில்லை.

உள்நாட்டுப் பழங்கள் ஏற்றுமதியில் நெடுந்தூர நாடுகளுக்குச் செல்லுவதில் கெட்டுப் போகுமானால் இப்பழங்கள் மிகப் பரந்த அளவில் இங்கு விளைவிக்கப்படும்.

இவ்வாண்டில் இந்திய வாழைப் பழங்களின் ஏற்றுமதி இலட்சிய அளவு 25 ஆயிரம் டன் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 31 லட்சத்து 70 ஆயிரம் மதிப்புள்ள 11 ஆயிரம் டன் வாழைப் பழங்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயின.

இந்திய வாழைப் பழங்கள் தற்போது குவாய்த், பாரின்

மற்றும் பாரசிக வளைகுடாவைச் சேர்ந்த நாடுகள் ஆகியவற்றுக்கு ஏற்றுமதியாகின்றன. ரஷ்யா இந்திய வாழைப் பழங்களை 4 ஆயிரம் டன் வாங்க ஒப்புக் கொண்டுள்ளது.

நாலரை லட்சம் ஏக்கரா பரப்பில் இரண்டு லட்சம் டன் வாழைப் பழங்கள் இந்தியாவில் விளைகின்றன. உலக வாழைப்பழ விளைச்சலில் இது ஆறில் ஒரு பங்காகும்.

இந்திய வாழைப் பழ ஏற்றுமதியில் ஐந்தில் மூன்று பங்கு மகாராஷ்டிராவிலிருந்தும் குஜராத்திலிருந்தும், மீதி தென்னாட்டிலிருந்தும் ஏற்றுமதியாகிறது.

தமிழ்நாட்டில் 82 ஆயிரம் ஏக்ரா பரப்பில் 72 ஆயிரம் டன் வாழைப்பழம் விளைகிறது.

ரஷ்யாவுக்கு அனுப்பப்படும் முதல் வாழைப்பழக் கப்பல் பம்பாயிலிருந்து ஒடெஸ்ஸா துறைமுகத்திற்கு செப்டம்பர் மாதம் புறப்படும். வாழைப் பழம் மட்டுமே ஏற்றிச் செல்லும் இக் கப்பலில் ஆயிரம் முதல் இரண்டாயிரம் டன் பழங்கள் குளிர் பதனப் பெட்டிகளில் அனுப்பி வைக்கப்படும். இவை அனைத்தும் மகாராஷ்டிரத்தில் விளையும் "ஹரசால்" என்னும் பச்சை நிற வாழைப் பழ வகையாகும்.

ரஷ்யாவுக்கு வாழைப் பழ ஏற்றுமதி செய்யும் ஒப்பந்தத்தை மகாராஷ்டிர மாநிலக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் செய்துகொண்டிருக்கிறது. யூகோஸ்லோவியா, இத்தாலி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளும் இச்சங்கத்திடம் வாழைப்பழங்கள் அனுப்பி வைக்கக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

## ஆயுள் கைதி மீது காதல்!

### இதாலியில் விசித்திர திருமணம்

ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் ஒரு கொலைகாரர் ஒருவரை 25 வயதுள்ள அன்னு டாஸ்டோர் அண்மையில் ஜெயிலில் திருமணம் செய்து கொண்டார்.

22 வயதுள்ள லிவியோ ஜியார்னே ஜெயிலிலிருந்து தப்பி பின்னர் அகப்பட்ட பிறகு டெலிவிஷனில் தோன்றிய பொழுது அந்தப் படத்தைக் கண்டதும் இந்தப் பெண் காதல் கொண்டு விட்டாள். காதல் கொண்டதும் காதலனுடைய தாயாரைத் தேடிக் கண்டு பிடித்தாள். பின்னர் காதலனுக்கே நேராகக் கடிதப் போக்குவரத்து ஆரம்பித்துவிட்டாள். சிறையில் உள்ள தேவாலயத்தில் அவர்களுக்குத் திருமணம் நடந்தேறியது.

ஜியார்னே தண்டனையை ஆட்சேபித்து இத்தாலிய சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்திருக்கிறார். அப்பீல் வெற்றி பெறாவிட்டால் 25 வருடமாவது

சிறையில் இருந்துதான் ஆக வேண்டும். அதற்குப் பிறகு விடுதலையாகித்தான் அவர் குடும்பம் நடத்த முடியும்.

---

## 2100 அறைகளைக் கொண்ட ஓட்டல்

*நியூயார்க் ஜூலை 6—*

நியூயார்க், நகரில் ராக்பெல்லர் நிலையத்தில் ரூ. 26 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஹில்டன் ஓட்டல் இப்போது திறக்கப்பட்டுள்ளது.

வானளாவும் இக் கட்டிடம் பல அடுக்கு மாடிகளைக்கொண்டதாகும். இந்த நவீன ஓட்டலில் 2153 அறைகளும், 54 தங்கும் விடுதிகளும் உள்ளன.

## உருவக ஓவியம் ரூ. 25 லட்சம்!

*பாரீஸ், ஜூலை 6—*

உருவக ஓவியங்களின் தந்தை எனப்படும் பிகா சோவைப் போன்று, உருவக ஓவியர்களில் பெயர் பெற்றவரான செமில் பியஸ்ஸாரோ என்னும் பிரஞ்சுக்காரர் எழுதிய இயற்கைக் காட்சி ஓவியம் ரூ. 25 லட்சத்துக்கு இங்குள்ள ஓவிய அரங்கில் விற்கப்பட்டது.

## தமிழில் சிறுவர் கலைக் களஞ்சியம்

*சென்னை ஜூன் 29-*

இந்திய மொழிகளிலே முதலாவதாகத் தமிழ்மொழியில் சிறுவர்க்கான தமிழ்க் களஞ்சியத்தை ரூ. 12 லட்சம் செலவில் தமிழ் வளர்ச்சிக் கழகம் விரைவில் தொகுக்கத் தொடங்கும். இக் கலைக் கலைக் களஞ்சியம் ஐந்து தொகுதிகளை உடையதாக இருக்கும்.

இன்னும் மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்படும் இப்பணி, ஆறாண்டு காலத்திற்குள் முடிந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஐந்து தொகுதிகளாக வெளிவரும் இக்கலைக் களஞ்சியத்தின் ஒவ்வொரு தொகுதியும் 200 பக்கங்கள் உள்ளதாகவும் ஏராளமான பக்கங்களைக் கொண்டதாகவும் இருக்கும். ஒவ்வொரு தொகுதியும் ரூ. 12 விலையில் ஒவ்வொன்றிலும் 20 ஆயிரம் படிகள் அச்சிடப்படும் என்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆசிரியர் ஒருவர் நேயன் செய்தியாளரிடம் கூறினார்.

ஏற்கனவே தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் ஒன்பது தொகுதிகளை வெளியிட்டுள்ள தமிழ் வளர்ச்சிக் கழகம் அத்தொகுதிகளில் விடுபட்டுப் போன தகவல்களையெல்லாம் பிற்சேர்க்கைகளாகத் தொகுக்கும் பணியில் இப்போது ஈடுபட்டுள்ளது.

## 4400 தடவையாக நடந்த நாடகம்

*லண்டன் ஜூலை 10—*

பிரபல துப்பறியும் நாவலாசிரியரான அகாதா கிறிஸ்டி எழுதிய "தி மவுஸ்ட்ராப்" (எலிப்

பொறி) என்னும் அப்பறியும் நாடகம் லண்டன் அம்பாச டார்ஸ் தியேட்டரில் இப்போது 4400-வது தடவையாக நடை பெற்றுள்ளது.

## பள்ளி செல்லும் 95 வயதுப் பாட்டி!

லண்டன் மே 31—

ஆடி பெஸ்டின் என்னும் 95 வயதுக் கிழவியொருத்தி இத்தனை வயதாகியும் மாலை நேரப் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கிறார்.

கடந்த 38 ஆண்டுகளாக அவர் உடுப்புத் தைக்கும் வகுப்புகளை மாலை நேரத்தில் நடத்தும் நிலையம் ஒன்றுக்குத் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறார். இதுவரை அவர் தன்னுடைய நண்பர்களுக்கும், வீட்டாருக்குமாக நூற்றுக்கணக்கான ஆடைகளைத் தைத்திருக்கிறார்.

"மாலை நேரப் பள்ளிக்குச் செல்வது என்னை இளமை யுணர்வுடன் இருக்கச் செய்கிறது. முதியவர்கள் பலர் வெளியில் சென்று பலரைச் சந்திப்பதை விடுத்து வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடக்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

## வேலூர் சிறை ஆயுள் கைதிகள்

---

### வித்வான் பரீட்சையில் தேர்வு

வேலூர் ஜூன் 18—

வேலூர் சிறையிலுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் 4 பேர் கடந்த மார்ச்சில் நடந்த தமிழ் வித்வான் புகுமுக பரீட்சைக்கு எழுதினர். இவர்களில் 3 பேர் தேர்வு பெற்றுள்ளனர். தமிழ் வித்வான் புகுமுக பரீட்சைக்கு இச்சிறையிலுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் அனுப்பப்பட்டது இதுவே முதல் தடவை. மற்றும் ஈ. எஸ். எல். சி. பரீட்சை கொடுத்த 10 ஆயுள் கைதிகளில் 3 பேர் தேர்வு பெற்றனர்.

## 3 மாதம் கெடாத சப்பாத்தி!

---

புதுடில்லி, ஜூலை 2—

3 மாதங்கள் வரை ருசியையோ போஷாக்கு சத்தையோ இழக்காமல் சப்பாத்தியைப் பாதுகாக்கும் புதுமுறை ஒன்றை மத்தியப் பாதுகாப்பிலாகா விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர். மாவுடன் ஒரு பொருளைச் சேர்த்து சப்பாத்தி தயாரித்து அதை பிளாஸ்டிக் பைகளில் வைத்தால் கெடாமல் இருக்கிறதாம். வட எல்லையில் போரிடும் ஜவான்களுக்கு இச்சப்பாத்தி சப்ளை செய்யப்படுகிறது. உயர்ந்த மலைகளில் ஜவான்கள் உட்கொள்வதற்கான உணவுப் பண்டங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வருகின்றனர். முன்னமேயே சமைக்கப்பட்ட உலர்த்தப்பட்ட உணவுப்பண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலர்த்தப்பட்ட உணவு வகைகளை எந்த உயரத்திலும் மீண்டும் சமைக்கலாம்.

# எழுபதிலும் இளமை நலத்தோடு வாழ வழி

*பண்டைக் காலத்தில் கிறிஸ்து பிறப்பதற்கு நாலாயிரம் ஆண்டு கட்கு முன்னர் சுமேரியர்கள் இளமையோடு வாழும் இரகசியத்தை அறிய முயற்சி செய்தனர். இன்றும் பலர் முயற்சிசெய்கின்றனர்.*

*காலத்தைத் தவறவிடவில்லையென்றால், உறுதியாக இதில் வெற்றி பெறலாம். எழுபதாண்டு நிறைந்தவர்கள் ஓட்டப் பந்தயத்தில் வேண்டுமாயின் வெற்றிபெறாமல் போகலாம். ஆனால் அவர்கள் உடலை ஆரோக்கியமாயும், உள்ளத்தை மகிழ்வாயும் வைத்துக் கொள்ளும் திறமை பெற்றுவிடலாம். இன்று இது எப்படி முடிந்தது? முன்னேற்றமடைந்துள்ள மருத்துவத்தினால்தான் முடிந்தது.*

*வயது ஆக ஆக, நீங்கள்கூட நவீன மருத்துவத்தின் உதவியினால் மகிழ்வாக வாழலாம். நீங்கள் தற்கால வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு, 70 ஆண்டுக்கு மேல் வாழலாம். இதை 'அதாவது, இந்த எழுபது ஆண்டை "முதுமை" என்று கூற முடியாது. கீழ்க்கண்ட விதிகளைக் கைக்கொண்டால், நீங்கள் உடலில்—உள்ளத்தில் இளமை நலத்தோடு இருக்கலாம்.*

**உங்கள் குடும்ப டாக்டரைத் தவறாது கண்டு, அவர் ஆலோசனையைப் பெறுங்கள்.**

*தற்கால நவீன மருத்துவ முறையினால், உங்கள் டாக்டர் உங்கள் நோய்களை முன்கூட்டியே கண்டுபிடிப்பதோடு, அதற்குச் சிகிச்சையும் செய்வார். நோய் வருமுன் தடுப்பதற்கான வழி வகைகளையும் சொல்வார்.*

## உணவில் கவனம் செலுத்துங்கள்

*வயது ஆக ஆக, குறைவான உணவே போதுமானது. சரிவிகித உணவு உங்களுக்கு மிகத் தேவை. வயது ஏற ஏற, உங்களுக்குப் போதுமான புரோட்டீன், வைட்டமின்கள், கஞ்சி போன்ற ஆகாரங்கள் தேவைப்படும். ஆனால் கொழுப்புச் சத்தும், கலோரிகளும் மிகக் குறைவாக உங்கள் உணவில் இருந்தால் போதும். பருமனான உடலையுடையவர்கள் இளமையோடும், வீரிய உணர்வோடும் இருக்கமுடியாது. அப்படிப் பட்டவர்கள் விரைவில் களைத்துப் போவதோடும் கூட, தங்கள் நலத்திற்குத் தீங்கையும் தேடிக் கொண்டவராவர். உங்கள் எடை எவ்வளவு இருக்கவேண்டும் என்றும், உங்*

கள் எடையை எவ்வளவு குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் உங்கள் டாக்டர் உங்களுக்கு ஆலோசனை கூறுவார். ஆனால் நீங்களாகவே டாக்டரைக் கலந்தாலோசிக்காமல் உணவுத் திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டாம்.

## போதுமான ஓய்வு

உங்கள் உடல் ஒரு யந்திரத்தைப் போன்றதுமாகும். இவை இரண்டும் மிகுதியான வேலையினால் களைப்படையும். உங்கள் உடலையும், மனத்தையும் களைத்துப் போக விட்டு விடாதீர்கள். அதிக உணர்ச்சி வசப்படுதல் உங்களைப் படுக்கையில் கிடத்திவிடும். எந்த வேலையையும் நிதானத்தோடு, ஆற அமரச் செய்யுங்கள். போதுமான ஓய்வும், நகைச்சுவையும் உங்கள் வேலைகளை அமைதியாகச் செய்ய உதவும்.

## உடற்பயிற்சி

முதுமையில் மூட்டுக்கள், முதுகு போன்றவற்றில் வலி ஏற்படும். உறுப்புக்களுக்கு நன்றாக வேலை கொடுத்து, அவற்றை நல்ல முறையில் வைத்துக் கொள்ள வேண்டும். உலவுதல் உடலுக்கு நலம் பயக்கும். கோல் பந்தாட்டம், நீந்துதல் போன்றவை மனத்திற்கு உற்சாகம் அளிக்கும்.

## மனத்தை வேலையில் செலுத்துதல்

நாம் ஒரு தொழிலுமே செய்யாது வாளாவிருந்தால் முதுமையை விரைவில் அடைந்து உணர்வைப் பெற்றுவிடுவோம். விருப்பத்தோடு வேலையில் ஈடுபட வேண்டும். அரை நூற்றாண்டுக்கு முன்னர் ஓர் ஆணோ, பெண்ணோ தமது அறுபத்தைந்தாவது வயதை அடைந்தவுடன் வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்திருக்கலாம். ஆனால் நிச்சயமாய் அந்த நிலை இன்றில்லை.

இன்றைய நவீன மருத்துவம் நம் ஆயுளை நீடிக்கச் செய்துவிட்டது. ஐம்பதாண்டுகட்கு மேலுள்ளவர்களின் வாழ்க்கையிலிருந்து நீங்கள் அனுபவத்தையும், நியாயத்தையும் கற்றுக் கொள்ளலாம். "உலகில் அவர்கள் ஒன்றையுமே சொல்லாமல் விட்டு வைத்தது இல்லை" என்று சில ஆண்டுகட்கு முன்னர் ஹென்றி போர்டு சொன்னார்.

## சமுதாயப் பணியில் பங்கு பெறுதல்

சிலர் வீட்டிலேயே தனியாக இருந்து கொண்டு, தம்மைத் தாமே நொந்து கொள்வர். இது மன அமைதியைக் கெடுக்கும். நீங்கள் மன மகிழ்வாக இருக்க விரும்பினால், உங்கள் நேரத்தையும் திறமையையும் மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள். சமுதாயத்தில் மற்றவர்களோடு நெருங்கிப் பழகி, அவர்களுக்கு மகிழ்வையூட்டி, நீங்களும் மகிழ்வாக வாழலாம்.

**எதிர் காலத்திற்காக உங்கள் பொருளாதார நிலையைப் பலப் படுத்திக்கொள்ளுங்கள்.**

வீணான கவலை உங்களுக்கு அகாலத்தில் முதுமையை உண்டாக்கிவிடும்; உங்கள் களிப்பைக் குலைத்துவிடும்; சில சமயங்களில் நோயைக் கூட உண்டாக்கிவிடும். எதையும் நீங்கள் திட்டமிட்டுச் செய்தால் கவலை உங்களை அணுகா. எவ்வளவு விரைவில் நீங்கள் திட்டமிட்டு எதிர்காலத்திற்கெனப் பணத்தைச் சேமித்து வருகிறீர்களோ, அவ்வளவு விரைவில் நீங்கள் முதுமையிலும் இளமை இன்பத்தை அனுபவிக்கலாம். உங்கள் உணவு, உடை, உறையுள் முதலியவற்றிற்கு மாத்திரமின்றி எதிர்காலத்தில் எதிர்பாராதவாறு ஏற்படும் தேவைகளுக்கும் பணம் மிக மிக அவசியம். ஆதலால், பணத்தைச் சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள்.

(நல்வழி)

---

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்திற்கேற்ப கல்வி முறை மாறுவது தவிர்க்க முடியாதது. இல்லாவிட்டால் படிக்கும் மாணவ மாணவிகள் கஷ்டப்பட நேரும்.

இத்தகைய கல்வி முறையை ஆசிரியர்கள் எதிர்த்தெழ வேண்டுமென்று நான் சொல்வதை தற்போதைய பாடத் திட்டங்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று சொல்வதாகக் கொள்ளக்கூடாது. அதிலுள்ள குறைபாடுகளை மனம் விட்டுச் சொல்லவேண்டும் என்றே கோருகிறேன். அப்பொழுதுதான் கல்வி அதிகாரிகள் மாற்றத்தக்க நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

ஆரம்பத்தில் திரு எம். எஸ். வெங்கடாச்சாரியார் பிரார்த்தனைக் கீதம் பாடினார். காரியதரிசி திரு. டி.கே. பத்மனாப சர்மா வரவேற்றார். ஆக்டிங் தலைமையாசிரியர் திரு. எம். சீதாராம குப்தா தலைமை வகித்தார். கூட்டுக்காரியதரிசி திரு. வி. நடேசய்யர் நன்றி கூறினார்.

—தினமணி

# இரண்டு காசுக்கு ஒருவேளை உணவு கிடைக்குமா?

---

## ரூ. 20 லட்சத்தை விரயமாக்க வேண்டாம் உருப்படியான திட்டத்துக்கு இதைச்செலவிடுக!

---

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (சித்தூர்) 31—7—63 இதழில் 'வாசகர்கள் கருத்து' என்ற பகுதியில் சிர்சி (வட கன்னடம்) ஜி. எஸ். ஹெட்கே என்பவர் எழுதியுள்ளதாவது:—

இவ்வாண்டுக்கு (1963—64) மதிய உணவுத் திட்டத்துக்காக ரூ. 20 இலட்சம் துவக்கப் பள்ளிச் சிறுர்களுக்கு இலவச உணவு அளிக்கப்படும் என்று கருநாடக மாநில கல்வியமைச்சர் அறிவித்துள்ளார்.

இதன்படி, ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டுக்கு நான்கு ரூபாய்தான் ஆகிறது.

மொத்தம் 240 நாட்கள்தாம் பள்ளி இயங்கும் என்ற கணக்குப்படி பார்த்தால்கூட, ஒரு மாணவனுக்கு ஒருவேளை உணவுக்கு இரண்டு காசுக்கும் குறைவாகவே கிடைக்கிறது.

இந்தத் தொகை மும்மடங்காக ஆக்கப்பட்டால்கூட, 6 காசுக்கு ஒருவேளை உணவு கிடைக்கும் என்று எப்படி நம்பமுடியும்?

அப்படிக் கிடைத்தாலும் அது ஊட்டம் தருவதாகவும் பலவகைச் சத்தும் கலந்ததாகவும் இருக்குமா?

அரசினர் முதலில் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும்.

இந்த இருபது இலட்ச ரூபாயை, கிராமப்புறங்களில் இப்போது இடப் பற்றுக்குறையாகவுள்ள பள்ளிகளில் வகுப்பறைகள் கட்டவும், ஆசிரியர்களுக்கான வீடுகள் கட்டித்தரவும், சுகாதாரக் குறைவாகவுள்ள பள்ளிகளைச் சுகாதார முறையில் இயங்கச் செய்யவும் பயன்படுத்தலாம்.

---

# ஆங்கில பாட புத்தகங்களை சர்க்கார் வெளியிடக் கூடாது

---

## தென்னிந்திய ஆசிரியர் சங்கக் கமிட்டி வற்புறுத்துகிறது

சில பாட புத்தகங்களை சர்க்காரே வெளியிடுவது என்ற கொள்கையைக் கைவிடுமாறு தென்னிந்திய ஆசிரியர்கள் சங்கத்தின் ஆங்கிலக் கமிட்டி வற்புறுத்துகிறது. பிடித்த புத்தகங்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கவேண்டுமென்கிறது.

மூன்றிலிருந்து 8-வது வரையில் உள்ள வகுப்புகளுக்கு சர்க்கார் சமீபத்தில் தயாரித்துள்ள ஆங்கில பாடதிட்டம் பற்றிய மகஜரிலேயே இவ்வாறு குறிப்பிடுகிறது.

இந்த மகஜரில் அது மேலும் கூறுவதாவது:—

பாடத் திட்டங்களை சர்க்காரே வெளியிடும் கொள்கையை நீடிக்கத்தான் வேண்டுமென்றால், மூன்று அல்லது நான்கு 'செட்' பாட புத்தகங்கள் இருக்க வகை செய்யவேண்டும்.

பாடபுத்தகங்கள் பற்றி ஆசிரியர்கள் தெரிவிக்கும் குறைகளையும் மாறுதல்களையும் எடுத்துரைப்பதற்கு ஸ்தாபனரீதியாக ஏற்பாடு இருக்கவேண்டும்.

மூன்றாவது வகுப்பிலேயே ஆங்கிலம் வாசிக்கும பழக்கமும், எழுதும் பழக்கமும் புகுத்தப்பட வேண்டும். வெறும் சம்பாஷணை பழக்கத்தை மட்டும் வளர்த்து விட்டால் போதாது. ஆனால் இந்தப் பாடதிட்டத்தின் நோக்கம் சம்பாஷணை பழக்கத்தை வளர்ப்பதாகவே உள்ளது.

1750 வார்த்தைகள் என்று இருப்பதற்குப் பதிலாக 2000 வார்த்தைகளைச் சொல்லித்தர வகைசெய்ய வேண்டும்.

3-வது வகுப்பிலேயே வாசிக்கும் பழக்கத்தைப் புகுத்தவில்லையெனில் குறைந்த பட்சம் பாடங்களைப் பார்த்துப் படிப்பதற்கு ஏதுவான சித்திரங்களுடன் கூடிய புத்தகமாவது இருக்க வேண்டும்.

மூன்றாவதிலிருந்து ஐந்தாவது வரை யுள்ள வகுப்புகளைப் பாட திட்டத்தில் முதலாவது கட்டமாகவும், அதற்குமேல் 8-வது வரையுள்ள வகுப்புகளை இரண்டாவது கட்டமாகவும் செய்து, ஒவ்வொரு கட்டத்தின் நோக்கம் என்ன என்பதை தெளிவு படுத்த வேண்டும்.

ஆங்கிலத்தில் மறு பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்காக ஆசிரியர்களின் ஸ்தாபனங்களுக்குத்

(48-ம் பக்கம் பார்க்க)

# "நிர்வாகங்களின் சுயேச்சையை ஒடுக்க மானியம் பயன்படுகிறது"

## தனியார் பள்ளிகள் சங்கக் கூட்டத்தில் துணைவேந்தர் கருத்து

உயர் நிலைப் பள்ளிக் கல்வி விஸ்தரிப்புக்காக சென்னை சர்க்கார் நன்கு திட்டமிடத் தவறிவிட்டது என்று மாஜி அண்ணாமலை சர்வ கலாசாலை உப அத்தியட்சகர் திரு. மணவாள ராமானுஜம் கண்டித்துப் பேசினார். பள்ளி நிர்வாகங்களின் தனித் தன்மையையும் சுயேச்சையையும் ஒடுக்குவதற்காக, மானிய உதவியை சர்க்கார் பயன்படுத்திக் கொண்டு வருகிறது என்றார்.

சென்னை ராஜ்யத்தில் சர்க்கார் உதவியுடன் நடத்தப்பட்டு வரும் தனியார் செகண்டரி பள்ளி நிர்வாகங்களது சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து அவர் பேசினார்.

மாணவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளச் சலுகைகள் மூலம் ஏற்படும் வருமான நஷ்டத்துக்காக நஷ்டஈடு அளிக்கும் விஷயத்தில் 1955-56ம் வருஷத்துக்கு முந்தி ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கும் அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளுக்கு மிடையில் பாரபட்சம் இருந்து வருவதாக மணவாள ராமானுஜம் குறிப்பிட்டார்.

பள்ளிக்கணக்குகளைத் தணிக்கை செய்யும் ஆடிட்டர்கள் முன்னுக்குப் பின் முரணாக கருத்துக்கள் தெரிவிக்கிறார்கள் என்றும் தலைமை ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் வழிகாட்டி உதவுவதற்காகக் கோட்பாடு எதுவும் இல்லையென்றும் அவர் சொன்னார்.

"அனுமதிக்கப்படாத" செலவுகளுக்கு சர்க்கார் மானியம் கொடுக்காமல் நிறுத்தி வைக்கும் பழக்கம் பற்றி அவர் குறிப்பிட்டார். இதற்குச் சட்ட பூர்வமான அடிப்படை ஏதாவது இருக்குமா என்பது தெரியவில்லை என்றார். ஸ்தாபனத்தின் நலனை யுத்தேசித்துச் சில செலவுகளைச் செய்யும் உரிமை நிர்வாகங்களுக்கு இருக்க வேண்டுமென்றார்.

கட்டிடங்கள் கட்டுவதற்காக வழங்கப்படும் மானியங்களுக்கு ரூ. 35,000 ஆக இருக்கும் உச்சவரம்பை ரூ.75,000 ஆக உயர்த்த வேண்டுமென்றார்.

ஆசிரியர்களோ அல்லது நிர்வாகத்தினரோ செய்து கொண்டுள்ள அப்பீல் மீது முடிவு அறிவிக்கப்படும்வரை, ஆசிரியர்களும் வேலையிலிருந்து நிற்கக் கூடாது;

நிர்வாகத்தினரும் அவர்களை வேலையிலிருந்து நீக்கக் கூடாது என்று சர்க்கார் ஒரு புதிய ஷரத்தைச் சேர்த்திருப்பது, சுமுகமாக வேலை நடப்பதற்கு இசைவானதல்ல என்று திரு.மணவாள ராமானுஜம் கூறினார்.

தனியார் நிர்வாகப் பள்ளிகளின் குறைகளை சர்க்கார் அலட்சியப்படுத்தி வந்தால், அவசியமாயின் அவை சொற்பகாலத்துக்கு வேலையை நிறுத்திவைத்து ஆட்சேபத்தைத் தெரிவித்துக் கொள்ளலாம் என்றும் அவர் யோசனை கூறினார்.

---

(46–ம் பக்கத் தொடர்ச்சி)

தாராளமாக மானிய உதவியளிக்கவேண்டும். இத்தகைய வகுப்புகளிலும், கருத்தரங்குகளிலும் மகாநாடுகளிலும்கலந்து கொள்ளச் சொல்லும் ஆசிரியர்கள் வேலைக்கு வராத நாளைக்கு வந்த தினங்களாகப் பாவிக்க வேண்டும்.

ஸ்ரீ ஆர் கிருஷ்ணமூர்த்தி தலைமையிலுள்ள இக்கமிட்டியில் பிரதர் அன்ஸ்லம், ஸ்ரீமான்கள்: டி. தம்புசாமி, ஏ. என். லட்சுமணராவ், எஸ். நடராஜன், டி. என். சுந்தரம், ஏ. கே. சீதாராமன், டி. எஸ். ராஜகோபால அய்யங்கார், மரியப்பிரகாசம், ஜி. ஸ்ரீனிவாஸாசாரி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.


## "ஆரம்பக்கல்வி" ஆபீஸ்.

**94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
*(ஆங்கிலம்)* 100 ரூ. 3–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
*(ஆங்கிலம்)* 100 ரூ. 2–50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
*(ஆங்கிலம்)* 100 ரூ. 2–50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
*(ஆங்கிலம்)* 100 ரூ. 1–25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
*(ஆங்கிலம்)* 100 ரூ. 2–50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
*(ஆங்கிலம்)* 10 ரூ. 2–50.

தபால் செலவு பிரத்யேகம்

**முக்கிய அறிவிப்பு**

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு :

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# ஏ. ஆர். சி. பள்ளிகள் புதுக் கட்டிடம் "ஸ்ரீ கிருஷ்ண நிவாஸ்"

# திறப்பு விழா

## மேதகு பிஷ்ணுராம் மேதி திறந்து வைத்தார்.

**பள்ளிக்கு ரூ. 250/- மதிப்புள்ள "சுழற்" கேடயம் தர முன்வந்தார்.**

**தமிழக மக்கள் கல்வி வளர்ச்சியில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிகளாக உள்ளனர்.**

*சென்ற 6—8—1963 செவ்வாய் மாலை 5 மணிக்குச் சென்னை சைவ முத்தய்யா முதலித் தெருவில் ஏ. ஆர். சி. பள்ளிகளின் புதுக் கட்டிடமாகிய "ஸ்ரீ கிருஷ்ண நிவாஸை" சென்னைக் கவர்னர் மேதகு பிஷ்ணுராம் மேதி அவர்கள் திறந்து வைத்தார்.*

*முதலில் கவர்னர் பெருமான் வருகை தந்ததும் வாயிலில் நாதசுரம் இசை முழங்கப் பள்ளி மாணவியர் இருமருங்கிலும் நின்று, பூரண கும்பம் ஏந்தி "வருக வருக" என மலர் தூவி இசைபாடி அழைத்துச் சென்றனர். புதுக் கட்டிடத்தின் வாயிலில் மகளிர் நேஷனல் கேடட் கோர்ஸ் அணிவகுப்பினைப் பார்வையிட்டார். பின்னர் "ஸ்ரீ கிருஷ்ண நிவாஸ்" கட்டடம் மேதகு பிஷ்ணுராம் மேதி அவர்களால் திறக்கப்பட்டது' என்று வெண் சலவைக்கல்லில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நிலைக் கல்லினைத் திறந்து வைத்துக் கட்டிடத்தின் முதல் வாயிலைப் பட்டு நாடாவைக் கத்தரிப்பதின் மூலம் திறந்து வைத்தார். பின்னர் கட்டிடத்தின் பகுதிகளைப் பார்வையிட்டார்.*

*மேடையில் கவர்னர் பெருமான் வந்து அமர்ந்ததும் பள்ளிச் சிறுமியர் "நல்வரவு" இசை பாடி அனைவரையும் வரவேற்றனர். பின்னர் பள்ளி மாணவிகள், ஆசிரியைகள், நிர்வாகிகள் சார்பில் தமிழில் ஒரு வரவேற்பு இதழும், ஹிந்தியில் ஒரு வரவேற்பு இதழும் படித்து அளிக்கப்பட்டது.*

*பின்னர் கவர்னர் பெருமானையும், விழாவில் கூடி இருந்தவர்களையும், ஏ. ஆர். சி. பள்ளியின் ஸ்தாபகர் திரு. கே. ராமய்ய செட்டியார் அவர்களின் விடாமுயற்சியையும் ஊக்கத்தையும்*

குறிப்பிட்டு பள்ளி நிருவாகக் குழுத் தலைவர் திரு. கே. வெங்கடசாமி நாயுடு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழா நிகழ்ச்சியைப் பாராட்டி இராஷ்டிரபதி டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், கனம் எம் பக்தவத்சலம், டாக்டர் பி. வி. செரியன், பத்மபூஷன் கெ. து. சுந்தரவடிவேலு ஆகிய பல்வேறு பெரியார்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகளைத் துணைத் தலைமை ஆசிரியை ஆர். பத்மாவதி பி.எஸ்ஸி. பி. டி. படித்தார்கள்.

அதனை அடுத்துப் பள்ளியின் நிருவாகி திரு. கே. இராமய்ய செட்டியார் அவர்கள் தனது மாமனார் திரு. ஏ. இராமானுஜலு செட்டியார் அவர்களால் 1882-ம் ஆண்டில் நான்கு மாணவர்களைக் கொண்டு தோற்றுவித்த திண்ணைப் பள்ளிக்கூடம் இன்று 1000-த்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக்கொண்டு வளர்ந்த வளர்ச்சியைக் கூறினார்.

மேலும் 1912-ல் மேதகு கவர்னர் லார்டு பென்லண்டு, 1944-ல் மேதகு லேடி ஹோப், 1950-ல் மேதகு பவனகர் மஹாராணி ஆகிய பெருமக்கள் வருகை தந்த குறிப்புக்களையும் எடுத்துக் கூறினார்.

திரு. மேதகு பிஷ்ணுராம் மேதி அவர்கள் கட்டடத் திறப்பு விழாவின் சொற்பொழிவாகக் கூறியவை :—

“ஏ. ஆர் சி, பள்ளி நிருவாகக் குழுத் தலைவர் அவர்கட்கும், பள்ளி ஸ்தாபகர் நிருவாகி, அவர்தம் துணைவி, ஆசிரியப் பெருமக்கள், மாணவிகள், பெற்றோர்கள், பெரியோர்கள் யாவருக்கும் எனது வணக்கம். இத்தகைய நல்ல சந்தர்பபத்தை எனக்கு அளித்தமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். நான் கட்டிடத்தின் உள்ளே சென்றதும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்விக்கும் படம் ஒன்றைக் கண்டேன். அது நினைவு படுத்துகிறது. அர்ஜுனனுக்குப் பகவான் கிருஷ்ணன் “இறைவன் இவ்வுலகில் உள்ள மக்கள் அனைவரிடமும், அனைவர் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறான். மக்களுக்குத் தொண்டு செய்வதே இறைவனுக்குத் தொண்டு செய்வதாகும்” என்கிறார். ஆகவே இந்தியாவில் பிறந்த நாம் அனைவரும் இறை உணர்வுகொண்டு, சாதி, சமய வேறுபாடு இன்றி எல்லா மக்களுக்கும் தொண்டு செய்யவேண்டும். நம் இருதயம் சுத்தமாய் இருக்கவேண்டும். கெட்ட எண்ணங்களும் செய்திகளும் நிரம்பப் பெற்றுள்ளோம். அதனை ஒழிக்கவே இந்தப்படம் நமக்கு நினைவுபடுத்துகிறது; வழிகாட்டுகிறது. பொதுவாக ஒவ்வொரு தனிப்பட்டவர்கள்

உள்ளமும் திருந்தினால்தான், வீடுகள் திருந்தும், சமுதாயம் திருந்தி நாடு செம்மையாக இருக்கும். சிறப்பாக இத்தகைய இறை உணர்ச்சியை, ஆன்ம வழிபாட்டு முறையை மாணவர்களுக்குச் சிறந்த வகையில் புகட்டவேண்டும் என்று ஆசிரியர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"கல்வி வளர்ச்சியில் சிறப்பாகத் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டுகிறது. இங்குக் கற்ற மாணவர்களிடம் சிறந்த ஒழுக்கம் நிலவி வருகிறது. பொது மக்கள் கல்வி வளர்ச்சிக்காக வீடுகள், நிலங்கள், ஆபரணங்கள் முதலியன உதவிபுரிகிறார்கள். இங்குள்ள ஆசிரியர்களோ வெளியே பல பெரியோர்களை அணுகிச் சென்று தங்கள் மாணவர் மாணவியர்களுக்குப் பகல் உணவு, சீருடை, புத்தகங்கள் முதலியன கொண்டுவந்து தந்து மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுகிறார்கள். பகல் உணவுத் திட்டத்திற்குப் பலர் நிலங்களும், வீடுகளும், ஆபரணங்களும் தருகின்றனர். கல்வி வளர்ச்சிக்கு நம் அரசு 25 கோடிக்குமேல் செலவழிக்கிறது. சிறப்பாகப் பெண்கள் கல்வி வளர்ச்சியில் அதிக ஊக்கம் காட்டுகிறது. முன்னாள் ராஷ்டிரபதி ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் அவர்களின் முயற்சியால் 14 வயதுவரை கட்டாயக் கல்வி முறையைக் கொண்டு வந்தார். ராஜ்ய அரசாங்கங்களும் இதில் கவனம் செலுத்துகின்றன. மேலும் இங்குள்ள (தமிழ் நாட்டில்) பொதுமக்கள் பள்ளிக்கு வேண்டிய ஆர்மோனியம், ஒலிபெருக்கி முதலிய பொருள்களும் பிறவும் தந்து உதவுகின்றனர்.

"நான்கு பிள்ளைகளைக்கொண்டு தனது மாமனால் தொடங்கப்பட்ட பள்ளியை இன்று 1200-க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு நடைபெறும் பல கட்டடம் உடைய பள்ளியாய் சிறக்கச் செய்தமைக்கு அவர் மருமகனார் (கே. இராமய்ய செட்டியார்) அவர்களையும், அவரது அருங்குண மனைவியையும் அதற்குத் துணையாய் இருந்த பெற்றோர்கள், தரும சிந்தனை உடைய பெருமக்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.

"இத்தகைய சிறந்த பள்ளியில் படித்து ஒவ்வொரு ஆண்டிலும் மாணவ மாணவியாய்த் திகழும் முதல் மாணவிக்கு ரூ. 250/- மதிப்புள்ள "சுழற் கேடயம்" ஒன்றினை அளிக்க முன் வருகின்றேன்." இவ்வாறு கவர்னர் தம் உரையில் குறிப்பிட்டார்கள்.

பள்ளி மாணவிகள் பல்வகை இசை, நடனம், நாட்டிய நாடக நிகழ்ச்சிகளை மேதகு கவர்னர் உளங்குளிரக் காட்டி மகிழ்வித்தனர். மாணவியரும், ஆசிரியர்களும் சீருடை அணிந்திருந்ததைக் கவர்னர்

அவர்கள் பாராட்டினர். இப்பள்ளியில் நேஷனல் கேடட் கோர்ஸ் இருப்பதைத் தான் பெரிதும் வரவேற்பதாகத் தம் உரையில் குறிப்பிட்டார்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. கே. சகுந்தலா, பி.எஸ்ஸி., பி.டி., அவர்கள் தமக்கே உரிய இனிய தமிழ்நடையில் நன்றி நவிலும்போது குறிப்பிட்டதாவது: "இன்று மழை இல்லாது காத்த வருண தேவனுக்கு முதலில் நன்றி கூறி, எங்கோ அஸ்ஸாம் மாகாணத்தில் இருந்து வந்து நமக்கே உரியது என்று சொல்லிக் கொள்ளும் பகவத் கீதையின் தத்துவங்களை நமக்கு உரைத்தார். நமது முதல் மந்திரி திரு. காமராஜ் அவர்கள் வந்தபோது வெறும் இடமாய் இருந்த இடம், இன்று கவர்னர் மேதகு பிஷ்ணுராம் மேதி அவர்கள் வந்தபோது உயர்ந்த கட்டடம் கொண்டதாய் விளங்குகின்றது. இராஜ்ய முதல் மந்திரி வந்துவிட்டார், முன்னைய கவர்னர்கள் வந்து சென்றனர். ஆனால் நமது பிரதம மந்திரி நேரு அவர்கள் வரவேண்டும் என்றே ஒரே ஒரு குறைதான். அதுவும் பக்கத்தில் உள்ள இடமும் கிடைத்துவிட்டால் அந்த எண்ணமும் முடிவுறும். கீதையில் வரும் கீதாசாரியன் போன்று எம் போன்றவர்க்கு ஊக்கம் அளித்து இப்பள்ளியை நல்லமுறையில் நடத்திச் செல்கிறார். சென்ற ஆண்டுதான் முத்து விழா நடத்தினர். 80-க்குப் பிறகு இளைஞராய்த் திரும்பி இத்தகு புதுக் கட்டடத்தை உருவாக்கினர். அவருக்கு வயது 60-க்கு மேல் ஆகின்றது. இனி அவர் கடவுளைப் பற்றி நினைப்பாரோ ஏதோ நமக்குத் தெரியாது. ஆனால் இன்று வரை இப்பள்ளியின் முன்னேற்றம் கருதியே சேவை செய்து வருகிறார், அந்த கீதாசாரியனைப் போன்று. அவர்தம் தொண்டு மேலும் சிறக்க இறைவன் நீண்ட ஆயுளை அவருக்கும் அவரது துணைவியாருக்கும் அளிப்பாராக. இவ்விழாவிற்கு வருகை தந்த மேதகு கவர்னர் பெருமானுக்கும், பெருமக்கள் அனைவருக்கும், நிருவாகக் குழுவினருக்கும், மாணவக் குழந்தைகளுக்கும் நன்றி செலுத்துகிறேன்."

முடிவில் தேசிய கீதம் பாடி முடிந்ததும் விழா இனிது முடிந்தது.

# பழனி. R. M. K. ராஜரத்தினம் நினைவுப் (மாணிக்கா) பள்ளி

## நிர்வாகி, திரு. வே. சாமுவேல் அவர்களின் மறைவு.

1891ம் ஆண்டு தோன்றி தனது 71 வயதிலே 9–7–1963–ல் இயற்கையெய்திய, பழனி R. M. K. ராஜரத்தினம் நினைவு (மாணிக்கா) பள்ளி, நிர்வாகி திரு. வே. சாமுவேல் அவர்கள், கல்வி வளர்ச்சி, பொதுப்பணி, சமயப்பணிகளில் செய்த சேவைகள் ஏராளம். பழனி நகரில் தனியார் துறைப்பள்ளிகள் (மதத் துறை



யின் பள்ளிகளைத்தவிர) இல்லாத வேளையிலே, அறியாமை அகற்றி அறிவொளி வீச ஓர் தொடக்கப் பள்ளியை தன் தந்தை வேத மாணிக்கம் ஓர் பள்ளியை 1943–ம் ஆண்டு இரண்டு ஆசிரியர்களைக் கொண்டு தொடங்கினார். அன்று முதல் அவர் மறைவு வரை அதன் தனிப்பட்ட நிர்வாகியாக இருந்து, அப் பள்ளியின் வளர்ச்சியில் பெரும் அக்கறை காட்டி சுமார் 500 மாணவர்கள் 17 ஆசிரியர்கள் இருக்கும் நிலைக்கு உயர்த்தினார். நகரிலே ஒரு பெரிய பள்ளி எனவும், மிக குறிப்பிடத்தக்க பள்ளியாகவும் இருக்கும் நிலையைச் செய்தார். பள்ளியின் கல்வித்தரம், மாணவர்களின் இதர திறமைகள் பலராலும் போற்றப்படுவது கண்டு மனம் குளிர்ந்தார். ஆசிரியர்

களின் நிலை உயரவேண்டும் என்று எண்ணம் கொண்டவர். 1957-ம் ஆண்டிலே, ஏழை மாணவர்களுக்குப் பள்ளிகளில் பகல் உணவு வழங்க மாநிலக்கல்வி இயக்குநர் வேண்டுகோள் விடுத்தபொழுது, அரசியலார் உதவி இன்றியே 25 மாணவர்களுக்குப் பகல் உணவு வழங்கினார். நண்பகல் திட்ட வித்தகனும், மாநிலக்கல்வி இயக்குநரின் புதல்வனுமான கா. சு. திருவள்ளுவர் நினைவாக தனது நண்பகல் உணவு நிலையத்திற்கு அப்பெயர் சூட்டி அதன் தலைவராக இருந்து 100 மாணவர்களுக்கு நல்ல உணவு வழங்கினார். ஆசிரியர்களும், மாணவர்களும் உரிமையுடன் அழைக்கவும், அவர்களுடன் அன்புடன் பழகவும் இருந்த பெரியவர். கிறிஸ்தவ மதத்துறையிலே ஏழைகளுக்கு உரிமைகள் சரியாக வழங்கப்பட மதுரை இராமநாதபுரம் அத்தியட்சாதீன ஏழை முன்னேற்ற சங்கம் நிறுவி, அதன் தலைவராக 20 ஆண்டுகள் நற்பணி ஆற்றிப் பல நன்மைகளைச் செய்தார். முற்போக்கு எண்ணம் கொண்டவர். அநீதிகளை எதிர்த்துப் போராடும் பண்புடையவர். நீதி, நேர்மை வழியில் வாழ்ந்தவர். ஆரம்ப ஆசிரியர்களின் வாழ்வுபெற உழைத்த தமிழ்நாடு ஆரம்ப ஆசிரிய பேரவைச் செயலாளர் திரு. S. வில்லியம்ராஜ் அவர்களின் தந்தை. இவரது மறைவு, கல்வித்துறைக்கும், பொதுப்பணிக்கும் பெரும் நட்டம்.

## கடலூர் கல்வி மாவட்ட உதவிபெறும் தொடக்கப் பள்ளி நிர்வாகிகள் மன்ற அழைப்புச் சிறப்புக் கூட்டம்.

---

10-8-63 சனி, பிற்பகல் 2 மணிக்கு கடலூர் கமிட்டி ஆதாரப் பள்ளியில் கடலூர், விருத்தாசலம், சிதம்பரம், கள்ளக்குறிச்சி தாலூகாகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட மன்ற உறுப்பினர்கள் நெல்லிக்குப்பம் திரு ரெங்கநாத செட்டியார் அவர்கள் தலைமையில் கூடி கீழ்கண்டபடி மாவட்ட மன்றம் அமைத்தனர்.

1. தலைவர் :— திரு. மா. திருநாவுக்கரசு, நிர்வாகி., காந்தி கலா நிலையம், காவனூர், காவனூர் P. O. திருக்கோட்டம் வழி, தெ. ஆ. மாவட்டம்.

2. செயலாளர் :— திரு. காசிநாதன் நிர்வாகி, வெற்றி உயராதாரப் பள்ளி & திருவள்ளுவர் உயர்நிலைப் பள்ளி, ஒரத்தூர் P.O. சிதம்பரம் வழி.

3. துணைத்தலைவர் :— 1. திரு. வி. நடேசன், பண்ருட்டி.
4. ஷை 2. திரு சாமித்துரை, நல்லாத்தூர்.
5. இணைச்செயலர் :— 1. ஐஜுப், குதூஸ், கள்ளக்குறிச்சி.
6. ஷை 2. திரு. ஜெகன்னுதன், சின்னக்கொசப்பள்ளம்.

உறுப்பினர்கள் :— 7. திரு. T. K. ரெங்கநாதன், நெல்லிக்குப்பம்.

8. திரு கோதண்டராமன், வளையமாதேவி.
9. திரு. மாசிலாமணி, விளையாந்தூர்.
10. திரு. பொன்னுசாமி, சாத்தியம்.
11. திரு. மோகனரங்கம், கள்ளக்குறிச்சி.
12. திரு தவமணி, உச்சிமேடு.
13. திரு. K. பெருமாள், பண்ணைப்பட்டு.
14. திரு. சின்னப்பப் படையாட்சி, செவ்வாயம்.
15. திரு. நடனம் பிள்ளை, காட்டுமன்னார்குடி.

இம்மாவட்ட மன்றத்தை மாநில மன்றத்துடன் இணைக்கவும், அவசியமாயின் மன்றத்தைப் பதிவு செய்யவும், முன் அனுபவமுள்ளவர்களைக் கலந்து நடைமுறைக்கான சட்ட திட்டங்களை வகுக்கவும், செப்டம்பர் 3—வது வாரத்திற்குள் மாவட்ட மாநாடு நடத்தவும் அதன் செலவிற்காக நிர்வாகிகளிடம் சுமார் ரூ. 1500/— நன்கொடை வசூலிப்பதென்றும் 24—8—63 அன்று மாவட்ட மன்றம் கூடி கலந்து பேசவேண்டுமென்றும் அதற்குள் எல்லாப் பள்ளி நிர்வாகிகளையும் தலா ஒரு ரூபாய் வீதம் ஆண்டுச் சந்தாபெற்று மன்ற உறுப்பினர்களாகச் சேர்த்துவிடவேண்டுமென்றும் ஷை 24௳ கூட்டத்திற்கு வரும்பொழுது நன்கொடை, சந்தாத் தொகைகளை வசூலித்து முடித்துக்கொண்டு வரவேண்டுமென்றும் D.E O. அவர்களையும் சட்ட மன்ற உறுப்பினர் திரு. P. R. சீனிவாசப் படையாட்சி அவர்களையும் சந்தித்து மாநாடு நடத்துவதற்கான ஆலோசனைகளைப் பெறுவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இன்னணம்,

M. திருநாவுக்கரசு,

தலைவர். உ. பெ. தொ. ப. நிர்வாகிகளின்
மாவட்ட மன்றம். கடலூர் கல்வி மாவட்டம்.

14—8—63

## விருத்தாசலம் தாலுக்கா அரசினர் உதவி பெறும் தொடக்கப்பள்ளி நிர்வாகிகள் மன்றம் விருத்தாசலம்.

---

# நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

---

கடந்த 21-10-62-ல் விருத்தாசலம் வட. கோ. தொடக்கப் பள்ளியில் நமது மன்றத்தின் சிறப்புக்கூட்டம் காவனூர் திரு. மா. திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தாலுக்காவின் பல பாகங்களிலிருந்து நிர்வாகிகள் பலர் வந்திருந் தனர்.

## நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள்.

1. நாடு முன்னேற திட்டங்கள் பல தீட்டப்பெற்று செய லாக்கப்பட்டு வருவதும் அவற்றுள் குழந்தைகளுக்கு கல்விபுகட்டும் திட்டத்தில் நாம் பங்குகொண்டிருப்பதும் நாமறிவோம். இக்கல்விப் பணி நன்கு நடைபெற புதிய முயற்சிகளை மேற்கொள்வோமாக. நமது பள்ளிகளில் வேலைசெய்யும் ஆசிரியர்களுடைய ஒத்துழைப் புடன் குழந்தைகளுக்கு நல்ல தரமான கல்வியளித்தும் ஊராரின் ஒத்துழைப்புடன் பள்ளிச்சீரமைப்பு, மதிய உணவு ஆகியவற்றில் வெற்றிகண்டும் பொதுமக்கள், அதிகாரிகள், அரசு ஆகியோரின் நன்மதிப்பை மென்மேலும் பெற ஆவனசெய்ய நமது மன்றம் நிர்வாகிகளை வேண்டுகிறது.

2. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஐவர் கொண்ட அடிப்படைக் குழுக்களமைப்பதென்றும், அக்குழு உறுப்பினர்களே தாலுக்கா நிர்வாகிகள் மன்ற நிர்வாகக்குழு உறுப்பினர்களாகக் கொள்ளப்பட்டு குறிப்பிட்ட தேதியில் கூடி தங்களுக்குள் தலைவர், செயலர், பொருளாளர், மாவட்ட நிர்வாகிகள், மன்ற நிர்வாகக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்வதென்றும் தீர்மானிக்கப் பட்டு நமது தாலுக்காவிலுள்ள நான்கு பஞ்சாயத்து யூனியன் களின் அடிப்படைக்குழுக்கள் கீழ்க்கண்டவாறு தேர்ந்தெடுக்கப் பட்டன.

### விருத்தாசலம் பஞ்சாயத்து யூனியன்

தலைவர் : திரு. A. குப்புசாமி அவர்கள் விருத்தாசலம்.

செயலர் : ,, குழந்தைவேலு பிள்ளை அவர்கள்<br>இருசாளக்குப்பம்.

பொருளர் : ,, அ. பூராசாமி அவர்கள்<br>நிர்வாகி, துவக்கப்பள்ளி, செம்பாளக்குறிச்சி. விருத்தாசலம் P.O.

உறுப்பினர் : திரு. சாமிக்கண்ணு படையாட்சி அவர்கள்
குப்பநத்தம்.

,, ,, R. திருப்பதி அவர்கள் செம்பாளக்குறிச்சி.

## கம்மாபுரம் பஞ்சாயத்து யூனியன்

தலைவர் : திரு. மா. திருநாவுக்கரசு அவர்கள் காவனூர்.

செயலர் : ,, முத்து. ராமானுஜம் அவர்கள் ஊமங்கலம்.

பொருளர் : ,, பாண்டுரங்கன் அவர்கள்
நிர்வாகி, கலைச்செல்வன் ஆதாரப் பாடசாலை,
விளக்கப்பாடி, ஒட்டிமேடு P. O.

உறுப்பினர் : ,, சாமிக்கண்ணு படையாட்சி அவர்கள்
ஒட்டிமேடு.

,, ,, K. கணேசன் அவர்கள் A. குறவன்குப்பம்.

## நல்லூர் பஞ்சாயத்து யூனியன்

தலைவர் : திரு. கோவிந்தசாமி அவர்கள் அகரம்.

செயலர் : ,, பொன்னுசாமி அவர்கள் சாத்தியம்.

பொருளர் : திரு. சின்னசாமி அவர்கள்
நிர்வாகி, துவக்கப்பள்ளி, கொத்தனூர், நல்லூர் P. O.

உறுப்பினர் : ,, ஜெகன்னாதன் அவர்கள் சின்னகொசப்பள்ளம்.

,, ,, பாலப்பன் அவர்கள் பெரியநசலூர்.

## திட்டக்குடி பஞ்சாயத்து யூனியன்

தலைவர் : திரு. பெரியசாமி அவர்கள் பொயனப்பாடி.

செயலர் : ,, செல்லமுத்து அவர்கள் நெடுங்குளம்.

பொருளர் : ,, S. மாசிலாமணி அவர்கள்
நிர்வாகி, துவக்கப்பள்ளி, விநாயகநந்தல், மங்களூர் P. O.

உறுப்பினர் : திரு. கருப்பன் அவர்கள் T. இளமங்கலம்.

,, ,, நல்லதம்பி அவர்கள் பில்லூர்

3. நமது மாவட்ட நிர்வாகிகள் மன்ற மாநாட்டை அடுத்து வரும் டிசம்பர் முதல் வாரத்தில் நடத்துவதென்றும், அம்மாநாட்டுச் செலவுக்காக நிர்வாகிகளிடம் நன்கொடை வசூலிப்பதென்றும், நன்கொடை விகிதாச்சாரம் ஒரு பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு தலா ஒரு ரூபாய் விதம் இருக்கவேண்டுமென்றும் இந்நன்கொடைக்காக ஆசிரியர்களைக் கேட்காமல் நிர்வாகிகள் தாமே கொடுப்பார் என்றும் முடிவெடுக்கப்பட்டு நிதிவசூல் வேலையை பஞ்சாயத்து யூனியன்களின் அடிப்படைக்குழு பொருளாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

தாலுக்காவிலுள்ள எல்லா நிர்வாகிகளும் தயவுசெய்து தத்தம் பஞ்சாயத்து யூனியன் அடிப்படைக்குழு பொருளாளர்களிடம் தத்தமக்குரிய நன்கொடையைக்கொடுத்துதவுமாறு மன்றம் வேண்டிக் கொள்ளுகிறது.

4. அடிப்படைக்குழு உறுப்பினர்கள் வரும் 3—11—1962 சனிக்கிழமை பிற்பகல்3-மணிக்கு விருத்தாசலம் வடக்குக்கோட்டை தொடக்கப்பள்ளியில் கூடி மன்றம் அளித்துள்ள அதிகாரப்படி தேர்தல்களை முடித்து மாவட்ட மாநாடு நடத்துவதுபற்றி ஆலோசிக்கப்படும்.

இங்ஙனம்,

**மா. திருநாவுக்கரசு,**

வி. தா. உ. பெ. தொ. ப. நிர்வாகிகள் மன்ற அமைப்பாளர்.

---

## அறிவுக்கதிர்

நாளுக்கு நாள் புதுப் புது சிருஷ்டிகளால் தன்னுடைய வளர்ச்சியைக் காட்டுவதே மனிதனின் இயற்கை. பழைய வழக்கங்கள் என்கிற சிறைச்சாலையிலேயே அவன் எந்நாளும் உழன்றுகொண்டிருக்க முடியாது.

—கவிஞர் தாகூர்

ஏழை மக்களுக்கு எவன் ஒருவன் தொண்டு செய்கின்றானோ அவனே உண்மை பக்தன். அவனுடைய உள்ளமே, ஆண்டவன் தேடிச்சென்று அமரும் அரியாசனம்.

—காந்தியடிகள்

அல்லிப் பூவிலே மல்லியின் மணம் கிடைக்காது. ஆற்று மணலைக்கொண்டு ஆரம் தொடுக்க இயலாது. அதைபோலவே, தீய உள்ளம் படைத்தவர்களால் தூய திட்டம் தீட்டவும் இயலாது.

—அறிஞர் அண்ணாதுரை

# எமது
# வெளியீடுகள்

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்**
('ஆரம்பக் கல்வி' நிலையம்)
**94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.**

*தபால் பெட்டி எண்* 1818. *டெலிபோன் எண்* **24544.**

**ஆரம்பப் பள்ளிகளுக்கு……**

• முதல், இரண்டாம் வகுப்புகளுக்கு அரசியலார் வெளியிடுகின்றனர்.

## திரு. வி. க. தமிழ் வாசகங்கள்

*ஆசிரியர் :*

**பி. வீரராகவன்**

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 8 | 0 | 3 | 28–5–'58 |
| நான்காம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13–5–'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 0 | 0 | 11 | 18–5–'60 |
| ஆறும் வகுப்பு | 1 | 4 | 0 | 25 | 10–5–'61 |

★

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

*ஆசிரியர் :*

**இராசாம்பாள் கோவிந்தராசன்,** M. A., L. T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 | 8 | 0 | 5 | 28-5-'58 |
| நான்காம் வகுப்பு | 0 | 12 | 0 | 21 | 13-5-'59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 | 0 | 0 | 13 | 18-5-'60 |

**இலக்கணமும் மொழிப் பயிற்சியும்**

**ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனர்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 | 12 | 0 | 4 | 16-5-'62 |

# சிறுவர் கணக்கு நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

**ஆசிரியர்: பி. வீரராகவன்**

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 8 0 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0 12 0 | 43 | 13-5-’59 |
| நான்காம் வகுப்பு | 0 14 0 | 25 | 13-5-’59 |
| ஐந்தாம் வகுப்பு | 1 4 0 | 39 | 15-5-’60 |

# புதுமுறை சங்கக் கணிதம்

**ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B. A., L. T.**

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 8 0 | 25 | 10-5-’61 |
| ஏழாம் வகுப்பு | 1 12 0 | 13 | 16-5-’62 |

# சிறுவர் சமூக நூல்

(புதிய பாடத் திட்டப்படி)

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 10 0 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0 12 0 | ... | ... |

**ஆசிரியர்: து. சே. உமாபதி M.A., L. T.**

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 1 14 0 | 44 | |
| செங்கற்பட்டு | 1 14 0 | 44 | |
| வட ஆற்காடு | 1 14 0 | 44 | |
| தென் ஆற்காடு | 1 14 0 | 44 | |
| சேலம் | 1 14 0 | 44 | 13-5-’59 |
| கோயம்புத்தூர் | 1 14 0 | 44 | |
| நீலகிரி | 1 14 0 | 46 | |
| திருச்சிராப்பள்ளி | 1 14 0 | 46 | |
| தஞ்சாவூர் | 1 14 0 | 46 | |
| மதுரை | 1 14 0 | | |
| இராமநாதபுரம் | 1 14 0 | | |
| திருநெல்வேலி | 1 14 0 | 22 | 16-5-’62 |
| கன்னியாகுமரி | 1 14 0 | | |
| ஐந்தாம் வகுப்பு | 1 12 0 | 43 | 18-5-’60 |

# சமூக நூல்

ஆசிரியர் : துரை பழனிவேல், B.A., B.T.

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 | 12 | 0 | 14 | 10–5–'61 |

ஆசிரியர் : த. சே. உமாபதி, M.A., L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2 | 0 | 0 | 18 | 16–5–'62 |

★

# இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 | 6 | 0 | ... | ... |
| மூன்றும் வகுப்பு | 0 | 7 | 0 | ... | ... |

ஆசிரியர் : M. விவேகானந்தா, B.Sc., L.T., M.ED.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான்காம் வகுப்பு | 0 | 10 | 0 | 30 | 13–5–'59 |

★

# சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 1 | 4 | 0 | 26 | 18–5 '60 |

★

# பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B.A., L.T.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 | 8 | 0 | 30 | 10–5–'61 |

★

துணைப்பாடப் புத்தகங்கள்

# சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனுர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 | 8 | 0 | 15 | 18–5–'60 |

## நீதிக் கதைகள்

ஆசிரியர்: வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 17 | 18–5–'60 |

★

## அறிவுச் சுடர்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 10 0 | 10 | 10–5–'61 |

MOTHER INDIA SUPPLEMENTARY READER

(By Mrs. Lucy Arulraj)

| | | | |
|---|---|---|---|
| VI STANDARD | 0 8 0 | 13 | 10–5–'61 |

FOR HIGH SCHOOLS

## திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

| | விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·25 | 25 | 10–5–'61 |
| எட்டாம் வகுப்பு | 1·75 | 21 | 13–5–'59 |

★

## புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B.A.,L.T.,

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·50 | 28 | 10–5–'61 |
| ஏழாம் வகுப்பு | 1·75 | 13 | 16–5–'62 |

## சமூக நூல்

ஆசிரியர்: துரை பழனிவேல், M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·75 | 14 | 10–5–'61 |

## சமூக நூல்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஏழாம் வகுப்பு | 2·00 | 18 | 16–5–'62 |
| எட்டாம் வகுப்பு | 2·50 | 35 | 16–5–'62 |

## பொது விஞ்ஞானம்

ஆசிரியர்: K. LAKSHMINARAYANASAMI, B.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1·50 | 30 | 10–5–'61 |

ஆசிரியர்: K. LAKSHMINARAYANASAMI, .A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·50 | 35 | 10–5–'61 |

## இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர்: புலவர் சொ. முருகேசனர்

| | | | |
|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 75 | 4 | 16-5-'62 |

## மாணவர் இலக்கணம்

| | | | |
|---|---|---|---|
| எட்டாம் வகுப்பு | 0 14 0 | 4 | 29–7–'59 |

## இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | 1 4 0 | 11 | 18–5–'60 |

த. சே. உமாபதி, M.A.,L.T.

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 1 8 0 | 31 | 10–5–'61 |

## ENGLISH NON-DETAILED

By Mrs. Lucy Arulraj.

| | | | |
|---|---|---|---|
| Mother India Supplementary Reader VI Std. | 0 8 0 | 13 | 10–5–'61 |
| Mother " " " III Form | 0 10 0 | 24 | 10–5–'61 |

## TAMIL NON-DETAILED

| | | | |
|---|---|---|---|
| அறிவுச் சுடர் (ஆறும் வகுப்பு) | 0 10 0 | 10 | 10–5–'61 |
| நாடும் மக்களும் | 1 0 0 | 17 | 18–5–'60 |
| தொண்டை நாட்டு மன்னர் | 1 0 0 | 19 | 18–5–'60 |
| பூம்புகார் | 0 14 0 | R.C.No. 9 | 15-3-'61 |
| திரு. வி. க. | 0 14 0 | 23 | 13–5–'59 |

ஆசிரியர்: லீலா பார்த்தசாரதி, B.A.,B.T.

| | | | |
|---|---|---|---|
| கணிதம் கற்பிக்கும் முறை | 2·00 | 2 | 5–7–'61 |

# சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A.,B.T

| | |
|---|---|
| ஆறும் வகுப்பு | 0·87 ந. பை. |
| ஏழாம் வகுப்பு | 0·75 ந. பை. |
| எட்டாம் வகுப்பு | 1·25 ந. பை. |
| ஒன்பதாம் வகுப்பு | 1·25 ந. பை. |
| பத்தாம் வகுப்பு | 1·50 ந. பை. |

## FOR ELEMENTARY SCHOOLS

# சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A.,B.T.

(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

**நான்காம் வகுப்பு**

**மாவட்டங்கள்**

| | |
|---|---|
| சென்னை | 0·75 ந. பை. |
| செங்கற்பட்டு | 0·75 ந. பை. |
| வட ஆற்காடு | 0·75 ந. பை. |
| தென் ஆற்காடு | 0·75 ந. பை. |
| சேலம் | 0·75 ந. பை. |
| கோயம்புத்தூர் | 0·75 ந. பை. |
| நீலகிரி | 0·75 ந. பை. |
| திருச்சிராப்பள்ளி | 0·75 ந. பை. |
| தஞ்சாவூர் | 0·75 ந. பை. |
| மதுரை | 0·75 ந. பை. |
| இராமநாதபுரம் | 0·75 ந. பை. |
| திருநெல்வேலி | 0·75 ந. பை. |
| கன்னியாகுமரி | 0·75 ந. பை. |
| ஐந்தாம் வகுப்பு | 0·94 ந. பை. |
| ஆறும் வகுப்பு | 0·87 ந. பை. |
| ஏழாம் வகுப்பு | 0·75 ந. பை. |

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

# பாடப் பயிற்சி திறவு கோல்
## (Key to Social Record)

4வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை சமூகப் பாடப் பயிற்சிகளுக்குத் திறவுகோல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளில் பலவிதமான கம்பெனிகளின் சமூக பாடப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில புத்தகங்களில் பயிற்சிப் புத்தகங்களில் கேட்கும் வினாக்களுக்கு விடை கிடைக்காமல் போகலாம். சில ஆசிரியர்களுக்கு உடனே விடை கொடுக்கச் சிரமம் ஏற்படலாம். வினா விடைகள், விளக்கங்கள் கொண்ட திறவுகோல் எல்லா வகுப்புகளுக்கும் வெளியிட்டிருக்கின்றோம். இது முக்கியமாக ஆசிரியர்கள் கையில் இருக்கவேண்டிய புத்தகமாகும். ஆதலால் திறவுகோல் இனாமாக எமது பயிற்சி நூல் வைத்துள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறோம். சிலர் பிள்ளைகளுக்கும் விடையை வாங்கிக்கொடுத்து வருகிறார்கள். அது சிறந்த முறையல்ல. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட திறவுகோல் வேண்டுபவர்களுக்கு பிரதி எட்டணா (50 ந. பை.) விலையில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பாடப்பயிற்சிகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வகுப்பு வாரி ஒரு திறவுகோல் பயிற்சிகளோடு இனாமாக அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், **"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"**,
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
சென்னை-1.


**வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!**
**வாழிய பாரத மணித்திரு நாடு!**

★ **படிப்பதற்கேற்ற எழில்மிகு ஏடுகள்!**
★ **நடிப்பதற்கேற்ற நற்றமிழ் நாடகங்கள் !!**

இதோ
பைந்தமிழ் எழுத்தாளர்
திருவாளர் **தாமரைக் கண்ணன்** அவர்கள்
**தீட்டிய**

அழகிய நாடக நூல்கள்! பள்ளி நூல்நிலையங்களில் வைப்பதற்கேற்ற அருந்தமிழ்க் கருவூலங்கள்!

| | ரூ. | காசு |
|---|---|---|
| 1. வெண்ணிலா | 1 | 50 |

தன் அண்ணனைத் திருத்தியதுடன் நன்கொடை
யென்றால் நானூறுமைல் தூரம் ஓடும் தந்தைக்கும்

நல்வழிகாட்டியாக இருந்து கல்விக்கூடங்கள் கலைக்கூடங்களாக விளங்கப் பாடுபடும் ஓர் மாணுக்கியைப் பற்றிய நாடகம். கருத்தாழமும் நகைச் சுவையும் நிறைந்த சமுதாயப் படைப்பு!

## 2. மருது பாண்டியர் 2 00

வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழிக்க அரும்பாடு பட்டுத் தம் நல்லுயிர் ஈந்து நற்புகழ் எய்திய தமிழ் மறவர் இருவரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகம். துள்ளும் நடையும் துடிப்புள்ள வசனங்களும் நெஞ்சத்தை உருக்கும் காட்சிகளும் நிறைந்த உணர்ச்சிமிக்க சித்திரம்!

## 3. அலெக்ஸாண்டர் 1 50

'உலகிலுள்ள காடெல்லாம் நாடாக வேண்டும்; அந்த நாடெல்லாம் நானுள வேண்டும்' என்று மண்ணகமெங்கணும் வெற்றி முரசு கொட்டிய கிரேக்கப் பெருவேந்தனின் வரலாற்றை முழுமையாக விளக்கும் அரிய நாடகம்! உள்ளத்தைக் கலங்க வைக்கும் காட்சிகளும் உணர்ச்சியுடன் வீறு கொண்டு எழச்செய்யும் பகுதிகளும் சிந்தனைக்கு அரிய விருந்தளிக்கும் நிகழ்ச்சிகளும் நிறைந்த ஈடு இணையற்ற ஏடு! தமிழில் இதுபோல் இதுவரை வெளிவந்ததில்லை!!

## 4. கிள்ளிவளவன் 1 50

கிள்ளிவளவன், நிலாச்சோறு, குமணன், இரத்த பாசம், புத்தர் ஆகிய ஐந்து அழகிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. ஏற்றமிகு கருத்துக்களைக்கொண்ட எழிலார் ஏடு!

கழிவு உண்டு. அருள் கூர்ந்து அணுகுங்கள்.

★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.